பட்டன. இந்நிறுவனங்களில் பணியாற்றிய அன்பர்களும், பிற நண்பர்களும், இப்பணியின் போது பேருதவி புரிந்தனர். இவர் கட்கெல்லாம் அன்பு நிறைந்த நன்றி உரியது.

திவாகர ஆய்வுப் பதிப்பு இரு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. முதல் தொகுதியில் ஆய்வு முன்னுரையும், தெய்வப்பெயர்த் தொகுதி தொடங்கிப் பண்பு பற்றிய பெயர்த் தொகுதி ஈறாக முதல் எட்டுத் தொகுதிகளும் உள்ளன.

முதல் தொகுதியில் அமைந்துள்ள ஆய்வு முன்னுரையில் நிகண்டின் தோற்றமும் வளர்ச்சியும், திவாகர நூல் அமைப்பு, திவாகரப் பதிப்புகள், திவாகர ஆய்வுப் பதிப்பு அமைந்துள்ள முறை ஆகியன விளக்கப் பெற்றுள்ளன.

இத்தொகுதியில் இறுதி நான்கு தொகுதிகளும் நிகண்டில் அமைந்துள்ள சொற்பொருள் அடைவும் தலைப்புப் பெயர் அகராதியும் உள்ளன.

சொற்பொருளடைவு மிக விரிந்த நிலையில் பல்வேறு நிலைகளிலும் பொருள் காண்பதற்குத் துணையாகும் வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இப்பதிப்பு நன்முறையில் உருவாவதற்குத் துணை நின்ற பெரு மக்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பதிப்புத் திட்டத்தினை ஏற்றுக் கொண்டு நிதியுதவி நல்கிய பல்கலைக் கழக நிதி நல்கைக் குழுவிற்கும், இப்பதிப்பினை வெளியிடுவதற்கு இசைவளித்த சென்னைப் பல்கலைக் கழக மாண்பமை துணைவேந்தர், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பதிவாளர், பதிப்புத் துறையினர் அனைவருக்கும் நன்றி உரியது.

ஆண்டுகள் பலவாயினும் நன்முறையில் அச்சிட்டுதவிய ஜனசக்தி அச்சகத்தார்க்கும், அச்சாகும் போது அவ்வப்போது உறுதுணை புரிந்த ஆய்வு மாணவர்கட்கும் நன்றி உரியது.

பல்லாண்டு முயற்சியின் பயனாக இப்பெரு நூற்பதிப்பு வெளிவருவதற்கு இன்னும் பல நண்பர்கள் துணைநின்று ஊக்கு வித்தனர். இவர்கட்கெல்லாம் எங்கள் உளங்கனிந்த நன்றி உரியது.

நிகண்டுப் பதிப்புகளுக்கெல்லாம் முன்னோடியாகவும் வழி காட்டியாயும் விளங்கிய பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு நினைவாக இவ்விரு தொகுதிகளையும் வெளியிடுவதில், பெருமகிழ்வு கொள்கிறோம்.

தமிழ் மொழியின் சொற்பொருள் வளத்தை அறிஞருலகு இப்பதிப்பு நூலின் வழி அறிந்து மகிழும் என்று நம்புகின்றோம். தமிழ்கூறு நல்லுலகம் இதனை ஏற்றுப் போற்றி வரவேற்குமாறு பெரிதும் வேண்டுகின்றோம்.

சென்னை
2 . 10 – 93

மு. சண்முகம் பிள்ளை
இ. சுந்தரமூர்த்தி
பதிப்பாசிரியர்

**ஒன்பதாவது**

# செயல்பற்றிய பெயர்த்தொகுதி

ஒன்பதாவது

# செயல்பற்றிய பெயர்த்தொகுதி

### 1558. தொழிலின் பெயர்

கருமமும், செயலும், தருமமும், **தொழிலும்**
வினையும் ஒருபொருள் விதியும் ஆகும்.

**தொழிலின் பெயர் :** (6)

*1. கருமம், 2. செயல், 3. தருமம், 4. தொழில், 5. வினை, 6. விதி.* (1)

### 1559. தொழிற்பயில்வின் பெயர்

தொறு என் கிளவி **தொழிற்பயில்வு** ஆகும்.

**தொழிற்பயில்வின் பெயர் :** (1)

தொறு. (2)

### 1560. தொழில் செய்தலின் பெயர்

அயர்தல், குயிற்றல், ஆற்றல், இழைத்தல்,
வனைதல், **செய்தல்** மாற்றம் ஆகும்.

**தொழில் செய்தலின் பெயர் :** (5)

*1. அயர்தல், 2. குயிற்றல், 3. ஆற்றல், 4. இழைத்தல், 5. வனைதல்.* (3

### 1561. மகளிர் விளையாட்டின் பெயர்

ஓரை, பண்ணை, கெடவரல், பொய்தல்,
உண்டாட்டு, கிரீடை, உப்பு, கேளி,
வண்டல், தொடலை, **மகளிர் விளையாட்டு.**

**மகளிர் விளையாட்டின் பெயர் : (10)**

1. ஓரை, 2. பண்ணை, 3. கெடவரல், 4. பொய்தல், 5. உண்டாட்டு, 6. கிரீடை, 7. உப்பு, 8. கேளி, 9. வண்டல், 10. தொடலை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனோடு,

'விலாசனை யென்பது மவர்விளையாட்டே'

என்பது இந்நூற்பாவின் இறுதியடியாக அச்சுப் பிரதியில் உள்ளது. ஆனால், பழமையான திவாகரச் சுவடிகளில் இவ்வடி இல்லை.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**பிறப்பித்தலின் பெயர்**

226. ★ நியமித்தல் விதித்த னிருமித்தல் சிட்டித்தல்
படைத்தல் பிறப்பித்தல் பாரித் தலுமாம். (4)

## 1562. கொண்டாடலின் பெயர்

பாராட்டு என்பது பரிந்து **கொண்டாடல்.**

**கொண்டாடலின் பெயர் : (1)**

பாராட்டு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கொண்டாடற் பெயர், கொண்டாட்டின் பெயர்.

'பாராட்டல் மெச்சல் பரிந்து கொண்டாடல்' என்பது அச்சுப்பிரதிப் பாடம். (5)

## 1563. விளையாடலின் பெயர்

வினோதம் (பொழுது கழித்தல்) **விளையாட்டு.**

**விளையாடலின் பெயர் : (1)**

**வினோதம்.**



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பொழுது கழித்து விளையாடலின் பெயர், விளையாட்டின் பெயர்.

3—4 கழித்து விளையாடல். (6)

## 1564. புதுமணத்தின் பெயர்

வதுவை, கடியே, மன்றல்இம் மூன்றும்
**புதுமணப் பெயர்**எனப் புகல்வர் புலவர்.

**புதுமணத்தின் பெயர் : (3)**

1. வதுவை, 2. கடி, 3. மன்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 வதுவைகடி மன்றல் என்றிவை மூன்றும்

2 : 3 புகன்றனர். (7)

## 1565. கைப்பற்றலின் பெயர்

கடியும், தீவேள்வியும் **கைப்பற்றல்** ஆகும்.

**கைப்பற்றலின் பெயர் : (2)**

1. கடி, 2. தீவேள்வி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 வேள்வியும்

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**மற்றுங் கைப்பற்றலின் பெயர்**

227. ★ விதியுளி வேட்டல் மணங்கல் யாணந்
தீவலஞ் செய்தலுஞ் செப்பற் பால. (8)

## 1566. விழாவின் பெயர்

முருகும், சாறும், சேறும், **விழாவே.**

**விழாவின் பெயர் : (3)**

1. முருகு, 2. சாறு, 3. சேறு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : திருவிழாவின் பெயர்.

இதனோடு, 'உயர்துணங் கறலு முற்சவமு மாகும்' என ஓர் அடி, அதிகமாக அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. (9)

## 1567. ஒப்பனையின் பெயர்

மண்ணல், கைசெய்தல், பொற்பு, அலங்கரித்தல்,
புனைதல், மிலைதல், வேய்தல், அணிதல்,
வனைதல், **ஒப்பனை** மாற்றம் ஆகும்.

**ஒப்பனையின் பெயர் : (9)**

1. மண்ணல், 2. கைசெய்தல், 3. பொற்பு, 4. அலங்கரித்தல், 5. புனைதல், 6. மிலைதல், 7. வேய்தல், 8. அணிதல், 9. வனைதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 2 அகைதல், தகைதல், கைவைத்தல், பந்தித்தல். (10)

## 1568. சூடுதலின் பெயர்

மிலைதலும், மலைதலும், வேய்தலும் **சூடுதல்.**

**சூடுதலின் பெயர் : (3)**

1. மிலைதல், 2. மலைதல், 3. வேய்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து மூன்று நூற்பாக்கள் ஒருசில பிரதிகளில் மட்டும் காணப்படுகின்றன. அவை வருமாறு :

**அப்புதலின் பெயர்**

கொட்டலுஞ் சதுர்த்தலு மப்புத லாகும்.

**பூசுதலின் பெயர்**

புலர்த்தலும் வரித்தலும் பூசுதலாகும்.

**சொருகுதலின் பெயர்**

அடைச்சல் செருகுத லாஞ்சொரு குதற்கே



சொருகுதலின் பெயர் மட்டும் அச்சுப்பிரதியிலும் காணப்படுகிறது. (11)

## 1569. அடிசிலூண் தொழிலின் பெயர்

அயிறலும், மிசைதலும், **அடிசிலூண் தொழிலே,**
(பகரின்) கைதொடலும், பாரணமும், ஆகும்.

**அடிசிலூண் தொழிலின் பெயர் : (4)**

1. அயிறல், 2. மிசைதல், 3. கைதொடல், 4. பாரணம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உண்டலின் பெயர்.

1 : 3—4 அடிசிலூண் டொழிலே

2 : 1—2 பகரிற்கை தொட்டலும். (12)

## 1570. உண்ணலின் பெயர்

துய்த்தல், அருந்துதல், ஆர்தல், துவ்வுதல்,
துற்றல், நுகர்தல், மாந்தல், அயிறல்,
உண்டல், தின்றல், பருகுதல் என்றுஇவை
**பண்பின் தொழிலைப்** பருகும் கிளவி.

**உண்ணலின் பண்பிற்றொழிற் பெயர் : (11)**

1. துய்த்தல், 2. அருந்துதல், 3. ஆர்தல், 4. துவ்வுதல், 5. துற்றல், 6. நுகர்தல், 7. மாந்தல், 8. அயிறல், 9. உண்டல், 10. தின்றல், 11. பருகுதல்,

**பாடவேறுபாடு—தலைப்பு**

தலைப்பு : உண்ணும் பண்பின் தொழிலின் பெயர், உண்டல் தின்றல் பருகுதலின் பெயர்.

3 : 4 லிஷவயுணும், விவையுண்ணும். (13)

## 1571. நுகர்தலின் பெயர்

நுங்கல், விழுங்கல், நொண்டல், **நுகர்தல்.**

**நுகர்தலின் பெயர் :** (3)

1. நுங்கல், 2. விழுங்கல், 3. நொண்டல்.

**பாடவேறுபாடு—தலைப்பு**

இந்நூற்பாவை விழுங்கலின் பெயர், நுகர்தலின் பெயர் என இரு வேறு நூற்பாக்களாகவும் ஒரு சில பிரதிகள் கொண்டுள்ளன. அவை வருமாறு :

**விழுங்கலின் பெயர்**

நுங்கல் விழுங்கல்.

**நுகர்தலின் பெயர்**

நொண்ட னுகர்தல். (14)

## 1572. துயிறலின் பெயர்

கண்படை, கண்வளர்தல், கனவோடு, அனந்தல்,
துஞ்சல், பள்ளி, **துயிறல் ஆகும்.**

**துயிறலின் பெயர் :** (6)

1. கண்படை, 2. கண்வளர்தல், 3. கனவு, 4. அனந்தல், 5. துஞ்சல், 6. பள்ளி.

**பாடவேறுபாடு—தலைப்பு**

தலைப்பு : உறங்குதலின் பெயர், உறங்கலின் பெயர்.

1 : 4 அனந்தர்

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு .

**மற்றுந் துயிறலின் பெயர் :**

228. ★ உறங்கலும் பண்டயு முரைப்ப ரதற்கே.

இதன் பின் அச்சுப்பிரதியில்,

**நிரம்பாத் தூக்கத்தின் பெயர்**

'**தூங்க னிரம்பாத் தூக்க மென்ப**'

என்னும் நூற்பா காணப்படுகிறது. ஆனால், இது பெரும்பான்மைப் பிரதிகளில் இல்லை. (15)



## 1573. களவின் பெயர்

கரப்பு, கட்டல், கள்ளல், கயவு,
கரவடத் தோடு, பட்டிமை களவே,

**களவின் பெயர் :** (6)

1. கரப்பு, 2. கட்டல், 3. கள்ளல், 4. கயவு, 5. கரவடம், 6. பட்டிமை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 கரவு—அச்சுப் பிரதி.

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா :

**மற்றுங் களவின் பெயர்**

229. ★ தேயந் தேனு சௌரியஞ் சோரம்
பட்டி திருட்டு படிறுமற்றதுவே.

இதனை அடுத்து அச்சுப்பிரதியில்,

**சித்தின் பெயர்**

சம்பிர தஞ்சித் தின்பெயர் மேற்றே.

என ஒரு நூற்பா உளது. இந்நூற்பா பழம்பிரதிகளில் இல்லை. (16)

## 1574. ஏறுதலின் பெயர்

எஃகலும், எக்கலும், இவர்தலும் **ஏறுதல்.**

**ஏறுதலின் பெயர் :** (3)

1. எஃகல், 2. எக்கல், 3. இவர்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

'எஃகலு மிவர்தலு மேறுத லாகும்' என்றும் பாடம் உண்டு. (17)

## 1575. வளைத்தலின் பெயர்

ஒசித்தல், கோட்டல், ஒடித்தல், அகைத்தல்,
ஞெமிர்தல், இறுத்தல், **வளைத்தல் ஆகும்.**

**வளைத்தலின் பெயர் :** (6)

1. ஒசித்தல், 2. கோட்டல், 3. ஒலித்தல், 4. அகைத்தல், 5. ஞெமிர்தல், 6. இறுத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முறித்தலின் பெயர்.

2 : 3—4 முறித்த லாகும்—அச்சுப் பிரதி.

**வளைதலின் பெயர்**

ஒசிதல் கோட லொடித லசைதல்
ஞெமிர்த லிறுத லொசித லாகும்.

என்றும் வேறுபடச் சில பிரதிகளில் மிகையாக இது உள்ளது.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பாவாவது :

**மற்று முறித்தலின் பெயர்**

230.★ இசித்த லென்று மியம்பற் பாற்றே. (18)

## 1576. வெறுப்பின் பெயர்

ஒசித்தலும், செறுத்தலும், வெறுப்பின் மேன.

**வெறுப்பின் பெயர் :** (2)

1. ஒசித்தல், 2. செறுத்தல். (19)

## 1577. உயர்தலின் பெயர்

ஒய்யலும், ஒசித்தலும் உயர்தலை உரைக்கும்.

**உயர்தலின் பெயர் :** (2)

1. ஒய்யல், 2. ஒசித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உயர்தலின் பெயர், உயர்த்தலின் பெயர், ஓய்தலின் பெயர், தளர்தலின் பெயர்.

1—3 ஒய்த்தலு மொசித்தலு முயர்தலை



1—4 ஒய்தலு மொசித்தலுந் தளர்தலை யுரைக்கும்.
ஒசிதலுந் தளர்தலு மோய்தலை யுரைக்கும்
—அச்சுப்பிரதி. (20)

## 1578. தாழ்தலின் பெயர்

இறைஞ்சல், குரங்கல், தாழ்தல் ஆகும்.

**தாழ்தலின் பெயர் :** (2)

1. இறைஞ்சல், 2. குரங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 இறைஞ்சுதல் குரங்கல், குரங்குத லிறைஞ்சல். (21)

## 1579. துவளலின் பெயர்

திவளம், திவண்டல், துவண்டல், துவளல்.

**துவளலின் பெயர் :** (3)

1. திவளல், 2. திவண்டல், 3. துவண்டல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இந்நூற்பா இருவேறு தலைப்பில் இருநூற்பாக்களாகவும் சில பிரதிகளில் அமைந்துள்ளன.

**அசைதலின் பெயர்**

திவள றிவண்டல்.

**வாடுதலின் பெயர்**

துவள றுவண்டல். (22)

## 1580. அழுதலின் பெயர்

கலுழல், கலக்கம், கசிதல், அழுதல்.

**அழுதலின் பெயர்:** (3)

1. கலுழல், 2. கலக்கம், 3. கசிதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 கலுழ்வே, கழுழே.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**மற்றும் அழுதலின் பெயர்**

231. ★ விம்மல் பொருமு லேங்க லுரோதன
மிரங்க லென்று மிசைக்கற் பாற்றே. (23)

## 1581. கோபத்தின் பெயர்

கறுப்பு, குரோதம், கலாமே, உடன்றல்,
சிவத்தல், வெயர்த்தல், வீளிவே, செற்றம்,
முனைவே, காய்தல், பைத்தல், விடைத்தல்,
சினமே, வேகம், கதமே, வெகுளி,
முனிவே, சீறல், உருத்தல், **கோபம்.**

**கோபத்தின் பெயர் :** (19)

1. கறுப்பு, 2. குரோதம், 3. கலாம், 4. உடன்றல், 5. சிவத்தல், 6. வெயர்த்தல், 7. விளிவு, 8. செற்றம், 9. முனைவு, 10. காய்தல், 11. பைத்தல், 12. விடைத்தல், 13. சினம், 14. வேகம், 15. கதம், 16. வெகுளி, 17. முனிவு, 18. சீறல், 19. உருத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 4 யுடறல்

2 : 2 வேர்த்தல், கூர்த்தல்.

3 : 4 விடைதல்.

'இது பண்புப் பெயர்த் தொகுதியில் சேரற்பாலது. இங்கு வந்தது கவனித்தற்பாலது' என்று பேராசிரியர் மு. இராகவையங்கார் தம்முடைய பிரதியில் குறிப்பு எழுதியுள்ளார்.

இந்நூற்பா அச்சுப்பிரதியில் இல்லை. (24)

## 1582. ஊடல் முதிர்ச்சியின் பெயர்

**ஊடலின் முதிர்தல்** ஆகும் புலவி.



**ஊடல் முதிர்ச்சியின் பெயர் :** (1)

புலவி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : புலவியென்னும் பெயர்.

3—4 புலவி யாகும். (25)

## 1583. புலவி நீட்டத்தின் பெயர்

**அதனின் நீடுதல்** துனி எனப் படுமே.

**புலவி நீட்டத்தின் பெயர் :** (1)

துனி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : துனியென்னும் பெயர்.

புலவியென்னும் பெயர், துனியென்னும் பெயர் என்னும் தலைப்பில் 1582,1583 ஆம் நூற்பாக்களைப் பின்வருமாறு ஒன்றாயிணைத்து ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன.

ஊடலின் முதிர்தலாம் புலவி யதனி
னீடுத றுனியென நிகழ்த்தப் படுமே.

இப்பாடம் பேராசிரியர் மு. இராகவையங்கார் பிரதியில் காணப்படுகிறது. (26)

## 1584. முடிவிடத்தின் பெயர்

ஒல்லலும், சிவணலும் **முடிவிடன்** உரைக்கும்.

**முடிவிடத்தின் பெயர் :** (2)

1. ஒல்லல், 2. சிவணல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 ஒல்லுஞ் சிரலும்—அச்சுப் பிரதி. (27)

## 1585. கடத்தலின் பெயர்

இகத்தல், உகளுதல், தாவுதல், வாவுதல்,

குதித்தல், அகறல், குப்புறல், நீடுதல்,
தத்தல், ஒன்பதும் தாண்டலும் **கடத்தல்.**

**கடத்தலின் பெயர் :** (10)

1. இகத்தல், 2. உகளுதல், 3. தாவுதல், 4. வாவுதல், 5. குதித்தல், 6. அகறல், 7. குப்புறல், 8. நீடுதல், 9. தத்தல், 10. தாண்டல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தாண்டுதலின் பெயர்.

1 : 1—2 இகுத லுகளல்,

3 : 1—2 **தத்த**லென வொன்பதும்

3 விதித்த வெட்டுந் தாண்டலுங் கடத்தல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**மற்றுங் கடத்தின் பெயர்**

232 ★ பரிகரி சேறல் பாறுத லோவன்
மீறுலு மதற்கே விளம்ப லாகும். (28)

## 1586. போகலின் பெயர்

படர்தல், சேறல், தீர்தல், நீத்தல்,
இயங்கல், விடுதல், வழங்கல், நீங்கல்.
இறத்தல், தணத்தல், இகத்தல், ஏகல்
கடத்தல், பெயர்தல், செலவு இவற்றொடு
நடத்தல் ஈரெட்டும் **போகல்** ஆகும்.

**போகலின் பெயர் :** (16)

1. படர்தல், 2. சேறல், 3. தீர்தல், 4. நீத்தல், 5. இயங்கல், 6. விடுதல், 7. வழங்கல், 8. நீங்கல், 9. இறத்தல், 10. தணத்தல், 11. இகத்தல், 12. ஏகல், 13. கடத்தல், 14. பெயர்தல், 15. செலவு, 16 நடத்தல்,

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2—4 தீர்தல் பிரிதல் சேறல்—அச்சுப்பிரதி.

4 ; 2 போதல்



இந்நூற்பாவில் அமைந்த பெயர்கள் முன்பின் மாற வெவ்வேறு வகையிலும் இந்நூற்பாவின் வடிவம் வேறுபடப் பிரதிகளில் உள்ளது.

படர்தல் சேற நீர்தல் விடுதல்
வழங்க லியங்கல் நீங்க லிறத்தல்
தணத்த லிகத்த லொதுங்கல் கடத்தல்
பெயர்தல் செலவே ஏக லிவற்றொடு
நடத்த லீரெட்டும் போக லாகும்.
படர்தல் சேறல் தீர்த்தல் தீர்தல்
பிரித லியங்கல் விடுதல் வழங்கல்
உயங்கல் நீங்குதல் இறத்தல் தணத்தல்
இகத்தல் கடத்தல் பெயர்தல் செலவென்
றவற்றொடு நடக்கும் ஈரெட்டும் போகல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**மற்றும் போகலின் பெயர்**

233. ★ இல்ல லொதுக்கங் கழித லிவறல்
சொல்லிய **நான்குந்** தொடருமற் றதற்கே. (29)

## 1587. விரைவின் பெயர்

கதழ்வும், வல்லையும், ஒல்லையும், கடுகலும்,
துனைவும், நொறிலும், துவறலும், முடுகலும்
**விரைவின்** கிளவி வேகமும் ஆகும்.

**விரைவின் பெயர் :** (9)

1. கதழ்வு, 2. வல்லை, 3. ஒல்லை, 4. கடுகல், 5. துனைவு, 6. நொறில், 7. துவறல், 8. முடுகல், 9. வேகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 3 தவறலும், துவரலும், துவர்தலும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்றும் விரைவின் பெயர்**

**234.** ★ கவனந் தாரை சடிதி சீக்கிரம்
ஈண்டு விதுப்பு விசையு மதுவே. (30)

## 1588. விரைவுக் குறிப்பின் பெயர்

ஞெள்ளல், சண்டப், குத்திரம், வெம்மை,
பொள்ளே, கோரம் எனஇரு மூன்றொடும்
ஐதெனல், கதுமெனல், பொருக்கெனல், நொய்தெனல்,
வெய்தெனல் இன்னவும் **விரைவுக் குறிப்பே.**

**விரைவுக் குறிப்பின் பெயர் :** (11)

1. ஞெள்ளல், 2. சண்டம், 3. குத்திரம், 4. வெம்மை, 5. பொள், 6. கோரம், 7. ஐதெனல், 8. கதுமெனல், 9. பொருக்கெனல், 10. நொய்தெனல், 11. வெய்தெனல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 4 மூன்றும்.

3 : 1 ஐயெனல்

4 : 3—4 விரைவின் கிளவி.

விரைவின் பெயர், விரைவுக் குறிப்பின் பெயர் என்னும் தலைப்பில் இரண்டும் (1587, 1588) விரைவின் பெயரின்கீழ் ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகள். (31)

## 1589. கடுகலின் பெயர்

கவனமும் துரிதமும் **கடுப்பு** ஆகும்மே.

**கடுகலின் பெயர் :** (2)

1. கவனம், 2. துரிதம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கடுப்பின் பெயர், அதிவிரைவின் பெயர்.

2 துருதமும்

கதனந் துரிதல் கவனங் கடுப்பே—அச்சுப்பிரதி. (32)



## 1590. முறுகலின் பெயர்

திருகல், **முறுகல்.**

**முறுகலின் பெயர் :** (1)

திருகல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

'திருகல் முறுக லாகு மென்ப' என்றும் சிலபிரதிகளில் பாடம்.

திருகல் முறுகல் கஞுலுதல் கஞுறல்.

திருகன் முறுகல் கஞுறல் கன்றல்—அச்சுப் பிரதி. (33)

## 1591. நெருங்குதலின் பெயர்

கஞுறுதல், கஞுறல், அமறல், நிமிரல்,
மறுதரல், மிடைதல், **நெருங்குதல்** ஆகும்.

**நெருங்குதலின் பெயர் :** (6)

1. கஞுறுதல், 2. கஞுறல், 3. அமறல், 4. நிமிரல், 5. மறுதரல், 6. மிடைதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

அமறன் மிடைத நெருங்குத லாகும்.

நிமிர்தன் மிடைத னெருங்குத லாகும்
—அச்சுப்பிரதி. (34)

## 1592. திரிதரலின் பெயர்

உழிதரல், கொட்பு, **திரிதரல்** ஆகும்.

**திரிதரலின் பெயர் :** (2)

1. உழிதரல், 2. கொட்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : திரிதரலின் பெயர், சுழறலின் பெயர்.

உழிதரல் கொட்பே திரித லாகும்.

உழிதரல் கொட்புத் திரிதல் சுரியல்
சுழற லாகச் சொல்லுவர் புலவர், (35)

## 1593. நீர்ச்சுழியின் பெயர்

உந்தியும், சுரியலும், **நீர்ச்சுழி** ஆகும்.

**நீர்ச்சுழியின் பெயர் :** (2)
1. உந்தி, 2. சுரியல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : நீர்ச்சுழலின் பெயர், நீர்ச்சுழல்வின் பெயர்.
2 : 4 சுரிதலு நீர்ச்சுழல் வாகும். (36)

## 1594. சுழலுதலின் பெயர்

சுரியல் **சுழலுதல்** ஆகலும் உரித்தே.

**சுழலுதலின் பெயர் :** (1)
சுரியல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
இந்நூற்பா அச்சுப்பிரதியில் இல்லை, (37)

## 1595. மீளுதலின் பெயர்

மறிதரல் என்பது மீளுதல் ஆகும்.

**மீளுதலின் பெயர் :** (1)
மறிதரல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
1 மறுதரல், மறிதல். (38)

## 1596. கொடுபோதலின் பெயர்

போதரல், **கொடுபோதல்.**

**கொடுபோதலின் பெயர் :** (1)
போதரல். (39)



## 1597. உலாப் போதலின் பெயர்

பவ்னி, **உலாப்போதல்.**

**உலாப் போதலின் பெயர் :** (1)
பவனி.

**பாடவேறுபாடு—விளக்கம்**
கொடுபோதலுக்கும் உலாப் போதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1596, 1597 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (40)

## 1598. ஓடலின் பெயர்

நெரிதரல், பாறல் இரிதல், **ஓடல்.**

**ஓடலின் பெயர் :** (3)
1. நெரிதரல், 2. பாறல், 3. இரிதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**மற்றுமோடலின் பெயர்**
235. ★ நிமிர்த னீளுத னிகழ்த்துப வதற்கே.
பின்றலும் பிறக்கிடலும் பிறகிட லாகும். (41)

## 1599. பிறகிடலின் பெயர்

பின்றலும், பிறக்கிடலும், **பிறகிடல்** ஆகும்.

**பிறகிடலின் பெயர் :** (2)
1. பின்றல், 2. பிறக்கிடல். (42)

## 1600. உராய்ப்போதலின் பெயர்

**உராய்ப்போதல்,** உளர்தல், உரிஞ்சல்.

**உராய்ப்போதலின் பெயர் :** (2)
1. உளர்தல், 2. உரிஞ்சல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உராய்ப் பெயர்தலின் பெயர், உரிஞ்சலின் பெயர்.

உராய்தல் பெயர்தல் ஊர்த லுரிஞ்சல்—என்றும் சில பிரதிகள்.

3—4 லுரோஞ்ச லுரிஞ்சல்—அச்சுப்பிரதி.

லுரோஞ்ச லுரிஞ்ச லாகும்—பிற பதிப்புக்கள். (43)

## 1601. வழிப்படுதலின் பெயர்

ஆற்றுப்படையே **வழிப்படுத்தல்** ஆகும்.

**வழிப்படுத்தலின் பெயர் :** (1)

ஆற்றுப்படை. (44)

## 1602. வலியழித்தலின் பெயர்

ஆற்றறுத் தல்லே, **வலியழித்தல்** ஆகும்.

**வலியழித்தலின் பெயர் :** (1)

ஆற்றறுத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வலியறுத்தலின் பெயர்.

1—2 ஆறறுத் தல்லே, ஆற்ற லறுத்தல்.

8—4 வலியறுத்த லாகும். (45)

## 1603. பாய்தலின் பெயர்

குப்புறல், உகளல், குதித்தல், **பாய்தல்.**

**பாய்தலின் பெயர் :** (3)

1. குப்புறல், 2. உகளல், 3. குதித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 குப்புற லுகளுதல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :



**மற்றும் பாய்தலின் பெயர்**

236. ★ உறுக்கலு மிதித்தலு முறைப்ப ரதற்கே. (46)

## 1604. சாரிகை வருதலின் பெயர்

மாதியும், வாளியும், **சாரிகையும்** மண்டிலம்.

**சாரிகை வருதலின் பெயர் :** (3)

1. மாதி, 2. வாளி, 3. மண்டிலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மண்டிலத்தின் பெயர், மண்டிலபாயோடலின் பெயர். சாரியின் பெயர்.

மாதியுஞ் சுற்றுஞ் சாரிகை தன்னொடு

வாளியு மண்டில மாவோட லாகும்—அச்சுப்பிரதி. (47)

## 1605. நேரோடுதலின் பெயர்

ஆதியும் வீதியும் **நேரோடுதல்** ஆம்.

**நேரோடுதலின் பெயர் :** (2)

1. ஆதி, 2. வீதி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1-2 வாலாதி வீதி

3-4 நேரோட லாகும். (48)

## 1606. செலுத்துதலின் பெயர்

**செலுத்தல்**, கடத்தல், துரத்தல், தூண்டல்

உகைத்தல், ஊர்தல், உய்தல், ஒரு பொருள்.

**செலுத்துதலின் பெயர் :** (6)

1. கடத்தல், 2. துரத்தல், 3. தூண்டல், 4. உகைத்தல், 5. ஊர்தல், 6. உய்த்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : செலுத்துதலின் பெயர்.

1 : 3—4 ஊர்த றூண்டல்.

2 உகைப்த்த றுய்தல் ஒரு பொருளாகும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நூற்பா :

**மற்றும் செலுத்தலின் பெயர்**

237. ★ நடவ லெய்த லோட்டலு மாகும். (49)

### 1607. அணுகலின் பெயர்

நண்ணல், நேர்தல், நணுகல், குறுகல்,
துன்னல், சார்தல், அண்ணல், **அணுகல்.**

**அணுகலின் பெயர் : (9)**

1. நண்ணல், 2. நேர்தல், 3. நணுகல், 4. குறுகல், 5. துன்னல், 6. சார்தல், 7. அண்ணல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அணுகுதலின் பெயர்.

2—4 அணுகுதல்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு;

**மற்றும் அணுகுதலின் பெயர்**

238. ★ மருவுதல் புல்லலருகுறல் சிவணி
லப்பெயர்க் குரியரிவன் றறைந்தனர் புலவர். (50)

### 1608. கூடுதலின் பெயர்

மணத்தல், **கூடுதல்.**

**கூடுதலின் பெயர் : (1)**

மணத்தல். (51)

### 1609. பிரிதலின் பெயர்

தணத்தல், **பிரிதல்.**

**பிரிதலின் பெயர் : (1)**

தணத்தல்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

கூடுதலின் பெயர் பிரிதலின் பெயர் என்னும் தலைப்பில், 1608, 1609-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (52)

### 1610. நீங்குதலின் பெயர்

நீத்தலும், துறத்தலும், ஒருவலும், **நீங்குதல்.**

**நீங்குதலின் பெயர் : (3)**

1. நீத்தல், 2. துறத்தல், 3. ஒருவல் (53)

### 1611. நீக்குதலின் பெயர்

சொல்லென் கிளவி நீக்குதல் ஆகும்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**நீக்குதலின் பெயர் : சொல்**

1—2 சேறலென் கிளவி.

இந்நூற்பா அச்சுப் பிரதியில் இல்லை. (54)

### 1612. தங்கலின் பெயர்

அசைதல், தெவிட்டல், ஆர்தல் இறுத்தல்,
வதிதல், இங்குதல், **தங்கன்** மாற்றம்.

**தங்கலின் பெயர் : (6)**

1. அசைதல், 2. தெவிட்டல், 3. ஆர்தல், 4. இறுத்தல், 5. வதிதல், 6. இங்குதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 லார்த றெவுனல்

2 வதித லிங்குதல் வைகுத றங்கல்

வதிதல் வை கல் தங்கலாகும் (55)

### 1613. நிலைபேற்றின் பெயர்

புரத்தல், துஞ்சல், அல்குதல், மன்னல்,
நிலைத்தல் ஐந்தும் **நிலைபேறு** ஆகும்.

**நிலைபேற்றின் பெயர் :** (5)

1. புரத்தல், 2. துஞ்சல், 3 அல்நதல், 4. மன்னல், 5. நிலைத்தல்.

**பாடவேறுபாடு விளக்கம்**

தலைப்பு : நிலைபெறுதலின் பெயர், நிலையின் பெயர்.

1 : 3 ஏற்கல் (56)

### 1614. சுமத்தலின் பெயர்

பரித்தலும், பொறுத்தலும், **சுமத்தல்** ஆகும்.

**சுமத்தலின் பெயர் :** ( )

1. பரித்தல், 2. பொறுத்தல். (57)

### 1615. முயற்சியின் பெயர்

உஞற்று, உழப்பு, தாளாண்மை, ஆள்வினை, ஊக்கம்,
இயற்றல் என்று இவை **முயற்சி** ஆகும்.

**முயற்சியின் பெயர் :** (6)

1. உஞற்று, 2. உழப்பு 3. தாளாண்மை, 4. ஆள்வினை, 5. ஊக்கம், 6. இயற்றல். (58)

### 1616. மிக்க செயலின் பெயர்

ஊராண்மை, **மிக்க செயல்.**

**மிக்க செயலின் பெயர் :** (1)

ஊராண்மை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மிக்க செய்தலின் பெயர், மிக்குச் செய்தலின் பெயர். (59)

### 1617. அரிய செயலின் பெயர்

பேராண்மை, **அரியசெயல்.**



**அரிய செயலின் பெயர் :** (1)

பேராண்மை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

மிக்குச் செயலுக்கும் அரிய செயலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1616, 1617 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (60)

### 1618. எண்ணலின் பெயர்

சூழ்ச்சி, உசாவே, தேர்ச்சி, நூல்என
யாப்புற **எண்ணல்—கிளவி** ஆகும்.

**எண்ணலின் பெயர் :** (4)

1. சூழ்ச்சி, 2. உசா, 3. தேர்ச்சி, 4. நூல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஆலோசனையின் பெயர்

1 : 1 சூட்சி, 4. நூலே (61)

### 1619. ஆராய்தலின் பெயர்

தேர்தல், தூக்கல், ஆய்தல், தெரிதல்,
ஓர்தல், தெளிதல், ஆய்வு, **ஆராய்தல்.**

**ஆராய்தலின் பெயர் :** (7)

1. தேர்தல், 2. தூக்கல், 3. ஆய்தல், 4. தெரிதல், 5. ஓர்தல், 6. தெளிதல், 7. ஆய்வு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஆய்தலின் பெயர்.

2 : 3—4. ஆராய் வாராய்தல். (62)

### 1620. தேடலின் பெயர்

நாடலும் நேடலும் **தேடல்** ஆகும்;
கூடும், கையரிக் கொள்ளலும் அதற்கே.

**தேடலின் பெயர் :** (3)

1. நாடல், 2. தேடல், 3. கையரிக் கொள்ளல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 3 கொளலும் (63)

## 1621. ஒற்றுமையின் பெயர்

**ஒற்றுமை**, குறிக்கோள்.

**ஒற்றுமையின் பெயர் :** (1)

குறிக்கோள்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குறிக்கோளின் பெயர். (64)

## 1622. ஒற்றின் பெயர்

**ஒற்றல்**, வேயே.

**ஒற்றின் பெயர் :** (1)

வேய்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஒற்றறிதலின் பெயர்.

ஒற்று வேவுவேய்—அச்சுப்பிரதி,

ஒற்றுமைக்கும் ஒற்றலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1621, 1622ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர் (65)

## 1623. வரையறுத்தலின் பெயர்

கணித்தல், குணித்தல், **வரையறுத்தல்** ஆகும்

**வரையறுத்தலின் பெயர் :** (2)

1. கணித்தல், 2. குணித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 கணித்தலுங் குணித்தலும் (66)



## 1624. விலையின் பெயர்

விற்றல், பகர்தல், நொடை, **விலை** ஆகும்.

**விலையின் பெயர் :** (3)

1. விற்றல், 2. பகர்தல், 3. நொடை. (67)

## 1625. கலக்கத்தின் பெயர்

வெறுப்பு, வெதிர், துருமம், புலம்பு, கவனம்,
முதிர்ப்பு, கலங்கல், **கலக்கம்** ஆகும்.

**கலக்கத்தின் பெயர் :** (7)

1. வெறுப்பு, 2. வெதிர், 3. துருமம், 4. புலம்பு, 5. கவனம், 6. முதிர்ப்பு, 7. கலங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1—2 வெறிப்பு வெதில்

1 : 1—4 வெறுப்பு விதிர்ப்புத் துருமம் புலம்புதல்

2 : 1 அதிர்ப்பு (68)

## 1626. நடுக்கத்தின் பெயர்

விதிர்ப்பு, பனிப்பு, விதலை, கம்பம்,
அதிர்ப்பு, பொதிர்ப்பு, **நடுக்கம்** ஆகும்.

**நடுக்கத்தின் பெயர் :** (6)

1. விதிர்ப்பு, 2. பனிப்பு, 3. விதலை, 4. கம்பம், 5. அதிர்ப்பு, 6. பொதிர்ப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2 பனித்தல்.

விதிர்ப்பும் பொதிர்ப்பு நடுக்க மாகும்—என்று சில பிரதிகளில் காணப்படுகிறது. (69)

## 1627. தியாகத்தின் பெயர்

வேள்வி, வண்மை, வேளாண்மை, உதவி,
கொடை, உபகாரம், கவிகை, பொழிதல்,

இடுதல், இகுத்தல், பணித்தல், ஈதல்,
தருதல், வழங்கல், வீசல், நல்கல்,
அருளல், அளித்தல், புரத்தல், **தியாகம்.**

**தியாகத்தின் பெயர் :** (19)

1. வேள்வி, 2. வண்மை, 3. வேளாண்மை, 4. உதவி, 5. கொடை, 6. உபகாரம், 7. கவிகை, 8. பொழிதல், 9. இடுதல், 10. இகுத்தல், 11. பணித்தல், 12. ஈதல், 13. தருதல், 14. வழங்கல், 15. வீசல், 16 நல்கல், 17. அருளல், 18. அளித்தல், 19. புரத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கொடையின் பெயர்.

3 இடுத லுதாரந் தான மீதல் (70)

## 1628. வரையாது கொடுத்தலின் பெயர்

(திடமொழி அம்பர்ச் சேந்தனை ஏய்ந்த)

கொடை மடம், **வரையாது கொடுத்தல்** ஆகும்.

**வரையாது கொடுத்தலின் பெயர் :** கொடைமடம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கொடை மடம் என்னும் பெயர். (71)

## 1629. வேள்வியின் பெயர்

ஓமம், கிருதுவே, எச்சம், யாகம்,
இட்டி, யூபம், மகம் இவை **வேள்வி.**

**வேள்வியின் பெயர் :** (7)

1. ஓமம், 2. கிருது, 3. எச்சம், 4. யாகம், 5. இட்டி, 6. யூபம், 7. மகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 மேதம் 2. கிருது, கிருதே (72)



## 1630. பாதுகாத்தலின் பெயர்

போற்றலும், ஓம்பலும், **பாதுகாத்தல்.**

**பாதுகாத்தலின் பெயர் :** (2)

1. போற்றல், 2. ஓம்பல். (73)

## 1631. தலைக்காவலின் பெயர்

இளை என் கிளவி **தலைக்காவல்** ஆகும்.

**தலைக்காவலின் பெயர் :** (1)

இளை. (74)

## 1632. அகத்திடுதலின் பெயர்

கவவு, **அகத்திடுதல்.**

**அகத்திடுதலின் பெயர்** (1)

கவவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கவவே யகத்திடு. (75)

## 1633. கொளற்பொருட்டின் பெயர்

தெவு, **கொளற் பொருட்டே.**

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. தெவ்வுக்

அகத்திடுதலுக்கும் கொளற்பொருட்டுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1632, 1633 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (76)

## 1634. பிச்சையின் பெயர்

பலியும், ஐயமும், பிண்டமும், பாசமும்,
சரியையும் **பிச்சையின்** பெயர்எனச் சாற்றுவர்.

**பிச்சையின் பெயர் : (5)**

1. பலி, 2. ஐயம், 3. பிண்டம், 4. பாகம், 5. சரியை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 1 சரியும், சருவும், சரிதையும். (77)

## 1635. இரத்தலின் பெயர்

இரவே, **இரத்தல்.**

**இரத்தலின் பெயர் : (1)**

இரவு. (78)

## 1636. கரத்தலின் பெயர்

கரவே, **கரத்தல்.**

**கரத்தலின் பெயர் : (1)**

கரவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இரத்தலுக்கும் கரத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1635, 1636 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர். (79)

## 1637. தொழுதலின் பெயர்

வணங்கல், பணிதல், அஞ்சலி, வந்தனை,
இறைஞ்சல், பரவுதல், தாழுதல், **தொழுதல்.**

**தொழுதலின் பெயர் : (7)**

1. வணங்கல், 2. பணிதல், 3. அஞ்சலி, 4. வந்தனை, 5. இறைஞ்சல், 6. பரவுதல், 7. தாழுதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 3 தாழ்தல். (80)

## 1638. பூசனையின் பெயர்

ஆரா தனையே, அருச்சனை, வழிபாடு,
**பூசனை** என்னப் புகன்றனர் புலவர்.



**பூசனையின் பெயர் : (3)**

1. ஆராதனை, 2. அருச்சனை, 3. வழிபாடு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பூசையின் பெயர். (81)

## 1639. பெறுதலின் பெயர்

வாய்த்தலும், பயத்தலும், **பெறுதல் மாற்றம்.**

**பெறுதலின் பெயர் : (2)**

1. வாய்த்தல், 2. பயத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. பலித்தலும்.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா.

**மற்றும் பெறுதலின் பெயர்**

239. ★ கிடைத்தலு மதுவெனக் கிளத்தற் பாற்றே. (82)

## 1640. உண்டாதலின் பெயர்

பூத்தலும், பயத்தலும், **உண்டாதற் பொருள.**

**உண்டாதலின் பெயர் : (2)**

1. பூத்தல், 2. பயத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

4. பொருள், பொருட்டே. (83)

## 1641. புணர்வின் பெயர்

இணை, விழுச்சு என்ப **புணர்வுப்** பெயரே.

**புணர்வின் பெயர் : (2)**

1. இணை, 2. விழைச்சு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : புணர்ச்சியின் பெயர்.

இணை விழைச்சுப் புணர்வு—என்றும் சில பிரதிகள்.
இணைவிழைச்சு மைதுனம் புணர்வுப் பெயரே
—அச்சுப்பிரதி. (84)

## 1642. தீவினைத் தொடர்பின் பெயர்

காதரம், **தீவினைத் தொடர்பது** ஆகும்.

**தீவினைத் தொடர்பின் பெயர் :** (1)
காதரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
3—4. தொடர்வதாகும், தொடர்பா கும்மே.
காதரந் தீவினைத் துடர்பு—என்றும் சில பிரதிகள் (85)

## 1643. கலத்தலின் பெயர்

கலவியும் புணர்ச்சியும் **கலத்தல்** ஆகும்.

**கலத்தலின் பெயர் :** (2)
1. கலவி, 2. புணர்ச்சி.

**பாடவேறுபாடு—விளக்கம்**
இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**மற்றுங் கலத்தலின் பெயர்**
240. ★ கலாவல் கலம்பக மளாவல்சங் கீரண
நிலாவு மதற்கே நிகழ்த்துப மேலோர். (86)

## 1644. பயிறலின் பெயர்

நவிறல், கெழுமல், **பயிறல்** ஆகும்.

**பயிறலின் பெயர் :** (2)
1. நவிறல், 2. கெழுமல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
தலைப்பு : பழக்கத்தின் பெயர்.
2. கெழும்பல். (87)



## 1645. அறுத்தலின் பெயர்

வகிர்தல், பிளத்தல், துமித்தல், துணித்தல்,
அரிதல், துண்டித்தல், தடிதல், பரிதல்,
**அறுத்தல்** ஆகும்என்று அறைந்தனர் புலவர்.

**அறுத்தலின் பெயர் :** (8)
1. வகிர்தல், 2. பிளத்தல், 3. துமித்தல், 4. துணித்தல், 5. அரிதல், 6. துண்டித்தல், 7. தடிதல், 8. பரிதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
2 : 2—3 துண்டித்த லகைத்தல்,
3 : 1—2 அறுத்த லாமென்.
அறுத்த லாகு மென்மனார் புலவர். (88)

## 1646. பறித்தலின் பெயர்

குற்றல், **பறித்தல்.**

**பறித்தலின் பெயர் :** (1)
குற்றல். (89)

## 1647. களைதலின் பெயர்

கட்டல், **களைதல்.**

**களைதலின் பெயர் :** (1)
கட்டல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**
பறித்தலுக்கும் களைதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1646, 1647 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கணிப்பர்.

அச்சுப்பிரதியில் **பறித்தலின் பெயர்** என்னும் தலைப்பில்

பின்வருமாறு அமைந்துள்ளது :

களைதல் குற்றல் கட்டல் பறித்தல். (90)

### 1648. பிய்த்தலின் பெயர்

புய்த்தலும், பூய்த்தலும் **பிய்த்தல்** ஆகும்.

**பிய்த்தலின் பெயர் :** (2)

1. புய்த்தல், 2. பூய்த்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பயத்தலின் பெயர்.

புய்த்தலும் பூத்தலும் பயத்த லாகும். (91)

### 1649. நெரித்தலின் பெயர்

**நெரித்தல்,** நெறித்தல்.

**நெரித்தலின் பெயர் :** (1)

1. நெறித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

நெரித்த றெறுதல்—அச்சுப்பிரதி. (92)

### 1650. அழுந்தலின் பெயர்

ஞெமுங்கல், **அழுந்தல்.**

**அழுந்தலின் பெயர் :** (1)

ஞெமுங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அழுங்கலின் பெயர்

2. அழுங்கல்.

நெரித்தலுக்கும் அழுந்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1649, 1650 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.



நெரித்தலின் பெயர் என்னும் தலைப்பிலும் ஒருசில பிரதிகள் இவற்றை ஒரே நூற்பாவாக அமைத்துள்ளன. (93

### 1651. கொல்லுதலின் பெயர்

நெருக்குதல், காதுதல், எற்றுதல், தேய்த்தல்,
முருக்குதல், ஒழித்தலும் **கோறலை** மொழிப.

**கொல்லுதலின் பெயர் :** (6)

1. நெருக்குதல், 2. காதுதல், 3. எற்றுதல், 4. தேய்த்தல், 5. முருக்குதல், 6. ஒழித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1 எருக்குதல், ஒருக்குதல்.

2 : 4 மொழியும்.

இதன் மேலும் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுநூற்பா ஒன்று வருமாறு :

**மற்றுங் கொல்லுதலின் பெயர்**

241. ★ வெட்டல் வீட்டுதல் படுத்தன் மாரணமு
மம்மொழிப் பாலவென் றறையல் வேண்டும். (94)

### 1652. அழித்தலின் பெயர்

சவட்டல், செகுத்தல், தெறுதல், சட்டித்தல்,
செவிட்டல், சிதைத்தல், **அழித்தல்** ஆகும்.

**அழித்தலின் பெயர் :** (6)

1. சவட்டல், 2. செகுத்தல், 3. தெறுதல், 4. சட்டித்தல், 5. செவிட்டல், 6. சிதைத்தல். (95)

### 1653. எறிதலின் பெயர்

விலங்குதல், **எறிதல்,** ஓச்சல், செலவிடுதல்.

**எறிதலின் பெயர் :** (3)

1. விலங்குதல், 2. ஓச்சல், 3. செலவிடுதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : **வீசுதலின்** பெயர், எற்றுதலின் பெயர்.

**1—2** வீசுத லெறிதல். (96)

## 1654. வெட்டலின் பெயர்

துமித்தல், துணித்தல், துண்டித்தல், **வெட்டல்.**

**வெட்டலின் பெயர் :** (3)

1. துமித்தல், 2. துணித்தல், 3. துண்டித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 துழாவல் வெட்டல்.

இதன் மேலும் முதற் **பதிப்பாசிரியர்** இணைத்த புது நூற்பா :

**மற்றும் வெட்டலின் பெயர்**

242. ★ பரிதல் கண்டித்தல் **பகுத்திட** றடித
எற்ற றறித்தலு மேற்கு மென்ப. (97)

## 1655. கிளறுதலின் பெயர்

கிண்டல், கிளைத்தல், **கிளறுதல்** ஆகும்.

**கிளறுதலின் பெயர் :** (2)

1. கிண்டல், 2. கிளைத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கிண்டலின் பெயர். (98)

## 1656. போழ்தலின் பெயர்

கீழ்தல் என்பது **போழ்தல்** ஆகும்.

**போழ்தலின் பெயர் :** (1)

**கீழ்தல்.** (99)



## 1657. கிழித்தலின் பெயர்

கீழ்தல், கீண்டல், **கிழித்தல்** ஆகும்.

**கிழித்தலின் பெயர் :** (2)

1. கீழ்தல், 2. கீண்டல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கீழ்தல் கீண்டல் கீறல் **கிழித்தல்**—அச்சுப்பிரதி. (100)

## 1658. குலைதலின் பெயர்

**குலைதல்,** குன்றல்.

**குலைதலின் பெயர் :** (1)

குன்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குன்றலின் பெயர்.

குலைதல் குறைத லவிதல் குன்றுதல்—என்றும் சில பிரதிகள். (101)

## 1659. சூறலின் பெயர்

**சூறல்,** சூன்றல்.

**சூறலின் பெயர் :** (1)

சூன்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சூலுதலின் பெயர்.

1. சூர்தல், சூலுதல்.

சூறல் சூன்ற றோண்ட லாகும்—அச்சுப்பிரதி.

குலைதலுக்கும் சூறலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1658, 1659 **ஆம்** நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (102)

## 1660. தோண்டலின் பெயர்

தொட்டல், **தோண்டல்.**

**தோண்டலின் பெயர் : (1)**

தொட்டல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

'தொட்ட றொடுந றோண்ட லாகும்' என்றும்

'தொட்ட றொடுத றோண்ட லகழ்தல்' என்றும் பாட வேறுபாடு காணப்படுகிறது.

அச்சுப்பிரதியில்,

**தோண்டலின் பெயர்**

சூறல் சூன்ற றோண்ட லாகும்.

என்றும், தொடர்ந்து,

மற்றும் தோண்டலின் பெயர் என்னும் தலைப்பின்கீழ்

தொட்டலுந் தொடுதலு மகழ்தலு மதற்கே

என்றும் தரப்பட்டுள்ளது. பிற்பதிப்புக்களிலும் இரண்டையும் ஒன்றாக்கி ஒரு நூற்பாவாகத் தந்துள்ளனர். (103)

## 1661. துளைத்தலின் பெயர்

தொள்கல், குய்ற்றல், **துளைத்தல்** ஆகும்.

**துளைத்தலின் பெயர் : (2)**

1. தொள்கல், 2. குயிற்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. தொள்ளல், தோளல். (104)

## 1662. கொழித்தலின் பெயர்

வரன்றல், வாருதல், வார்தல், **கொழித்தல்.**

**கொழித்தலின் பெயர் : (3)**

1. வரன்றல், 2. வாருதல், 3. வார்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தெள்ளுதலின் பெயர், வாருதலின் பெயர்.

இந்நூற்பா இருவேறு தலைப்பில் இருநூற்பாவாகவும் ஒருசில பிரதிகளில் காணப்படுகிறது.



**வாருதலின் பெயர்**

வரன்றல் வாருதல்.

**கொழித்தலின் பெயர்**

வார்தல் கொழித்தல்.

இதற்கு 'வரன்றல் கொழித்தல்' என்றும் பாடமுண்டு.

இந்நூற்பாவை அடுத்து முதற்பதிப்பாசிரியர் அமைத்த புதுநூற்பா :

**மற்றும் கொழித்தலின் பெயர்**

243. ★ தெள்ளுத லெனவுஞ் செப்பற் பாற்றே. (105)

## 1663. தெரிதலின் பெயர்

வரன்றல் என்பது **தெரிதல்** ஆகும்.

**தெரிதலின் பெயர் : (1)**

வரன்றல். (106)

## 1664. தூய்மைச் செயலின் பெயர்

உவளித்தல் **தூய்மைச்** செயலை உணர்த்தும்.

**தூய்மைச் செயலின் பெயர் : (1)**

உவளித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வாய்மைச் செயலின் பெயர்.

1 உவனித்தல்

2—3 வாய்மைச் செயலை

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்றுந் தூய்மைச் செயலின் பெயர்**

244. ★ உபலா ளனமென் றுணர்த்தவும் படுமே. (107)

## 1665. கடைதலின் பெயர்

கவர்தல், குடைதல், ஞெலிதல், **கடைதல்.**

**கடைதலின் பெயர் :** (3)

1. கவர்தல், 2. குடைதல், 3. ஞெலிதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 தவர்தல் குடைதல். (108)

## 1666. சிந்துதலின் பெயர்

சிதர்தலும், ததர்தலும், **சிந்துதல்** ஆகும்.

**சிந்துதலின் பெயர் :** (2)

1. சிதர்தல், 2. ததர்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 தகர்தலும், தூவலும்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் அமைத்த புது நூற்பா :

**மற்றுஞ் சிந்துதலின் பெயர்**

245. ★ உகுத்தலு முளர்தரு முரியமற் றதற்கே,

உகுத்தலு முளர்த்தலும்— பிற்பதிப்புக்கள். (109)

## 1667. வடுப்படுதலின் பெயர்

கதுவாய், **வடுப்படுதல்.**

**வடுப்படுதலின் பெயர் :** (1)

கதுவாய்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வடுப்படுத்தலின் பெயர்.

2 வயப்படுதல். (110)

## 1668. தினவின் பெயர்

கண்டூதி, **தினவே,**

**தினவின் பெயர் :** (1)

கண்டூதி.



**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா.

**மற்றுந் தினவின் பெயர்**

246. ★ சொறியென் கிளவியுஞ் சொல்லுப வதற்கே.

வயப்படுத்தலுக்குந் தினவுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1667, 1668 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (111)

## 1669. அடுத்தலின் பெயர்

**அடுத்தல்,** கூடுதல்

**அடுத்தலின் பெயர் :** (1)

கூடுதல். (112)

## 1670. வழிப்பறியின் பெயர்

ஆறலை, **வழிப்பறி.**

**வழிப்பறியின் பெயர் :** (1)

ஆறலை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வழிப்பறித்தலின் பெயர்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்றும் வழிப்பறித்தலின் பெயர்**

247. ★ அதர்கோளு மற்றதற் காகு மென்ப.

அடுத்தலுக்கும் வழிப்பறித்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1669, 1670ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (113)

## 1671. நெருங்கலின் பெயர்

இடங்கழிமை **நெருங்கல்,** மீதூர்தல் ஆகும்.

**நெருங்கலின் பெயர் :** (2)

1. இடங்கழிமை, . மீதூர்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 மீதூரலாகும். (114)

## 1672. அலைப்பின் பெயர்

உலைத்தல், ஒறுத்தல், தீர்த்தல், அடல், மிறைசெயல்,
அகைத்தல், வேதனை, **அலைப்பு** என மொழிப.

**அலைப்பின் பெயர் :** (7)

1. உலைத்தல், 2. ஒறுத்தல், 3. தீர்த்தல், 4. அடல், 5. மிறைசெயல், 6. அகைத்தல், 7. வேதனை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அலைத்தலின் பெயர், உலைப்பின் பெயர்.

1 : 3—4 லுயங்கல் மிறை செயல்

2 : 3—4 யுலைப்பாமென மொழிப, (115)

## 1673. மடங்கலின் பெயர்

நுணங்கே, முடங்கல், **மடங்கல்** ஆகும்.

**மடங்கலின் பெயர் :** (2)

1. நுணங்கு, 2. முடங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நுடங்கலின் பெயர்

1—2 நுணங்கே நுடங்கல், குணங்கே நுணங்கன்.

இந்நூற்பாவை இருவேறு தலைப்புக்களில் இருநூற்பாவாகவும் சில பிரதிகள் தந்துள்ளன. அவை வருமாறு :

**நுணங்கலின் பெயர்**

நுணங்கே நுடங்கல்.

**மடங்கலின் பெயர்**

முடங்கன் மடங்கல், (116)



## 1674. சாதலின் பெயர்

துஞ்சல், பொன்றல், விளிதல், வீதல்,
முஞ்சல், துவன்றல், முடிவு, உலத்தல், வீடல்,
மாய்தல், இறத்தல், மாளல், தபுதல்,
**சாதல்** என்னச் சாற்றினர் புலவர்.

**சாதலின் பெயர் :** (13)

1. துஞ்சல், 2. பொன்றல், 3. விளிதல், 4. வீதல், 5. முஞ்சல், 6. துவன்றல், 7. முடிவு, 8. உலத்தல், 9. வீடல் 10. மாய்தல், 11. இறத்தல், 12. மாளல், 13. தபுதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 2—4 துவண்டன் முடிதல் வீடல்

3 : 3 மாளுதல். (117)

## 1675. கொலை செய்தலின் பெயர்

அடுதல், வீட்டல், அணங்கல், வெட்டல்,
படுத்தல் என்றுஇவை **கொலைசெயற் பால.**

**கொலை செய்தலின் பெயர் :** (5)

1. அடுதல், 2. வீட்டல், 3. அணங்கல், 4. வெட்டல் 5. படுத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3 வறுத்தல். (118)

## 1676. வேறுபடலின் பெயர்

வீற்றும், பேதும், விள்ளலும், திரிவும்,
வேற்றுமையும் கொள்ப **வேறுபடல்** பொருட்டே.

**வேறுபடலின் பெயர் :** (5)

1. வீற்று, 2. பேது, 3. விள்ளல், 4. திரிவு, 5. வேற்றுமை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* வேறுபாட்டின் பெயர்.

1 : 2—4 பேதமும் வின்னலும் திரிபும்.

2 : 3—4 வேறுபடற் பொருளே. (119)

### 1677. குன்றலின் பெயர்

சிங்கலும், எஞ்சலும், தவலும், **குன்றல்.**

**குன்றலின் பெயர் :** (3)

1. சிங்கல், 2. எஞ்சல், 3. தவல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3. தவறலும். (120)

### 1678. அழிதலின் பெயர்

உலைதலும், முருங்கலும், **அழிதல்** ஆகும்.

**அழிதலின் பெயர் :** (2)

1. உலைதல், 2. முருங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* அழித்தலின் பெயர்.

2 முருகலும், முருக்கலும்.

உலைத்தலு முருக்கலு மழித்த லாகும். (121)

### 1679. தளர்தலின் பெயர்

ஒல்கலும், இழுக்கலும், **தளர்தலை** உரைக்கும்.

**தளர்தலின் பெயர் :** (2)

1. ஒல்கல், 2. இழுக்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* தளர்வின் பேர். (122)



### 1680. வளைத்தலின் பெயர்

சுற்றுதல், கோலல், சூழ்போதல், வரையறுத்தல்,
முற்றுதல், சூழ்தல், வளாவல், **வளைத்தல்.**

**வளைத்தலின் பெயர் :** (7)

1. சுற்றுதல், 2. கோலல், 3. சூழ்போதல், 4. வரையறுத்தல், 5. முற்றுதல், 6. சூழ்தல், 7. வளாவல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இந்நூற்பாவையே மூவேறு தலைப்பில் மூன்று நூற்பாவாகவும் சில பிரதிகள் பின்வருமாறு கொண்டுள்ளன :

**சுற்றுதலின் பெயர்**
சுற்றுதல் கோலல்.

**வரையறுத்தலின் பெயர்**
சூழ்போல் வரையறுத்தல்.

**வளைத்தலின் பெயர்**
முற்றுதல் சூழ்தல் வளாவல் வளைத்தல். (123)

### 1681. பிடித்தலின் பெயர்

தொட்டல், **பிடித்தல்,** தொடுத்தல், வளைத்தல்.

**பிடித்தலின் பெயர் :** (3)

1. தொட்டல், 2. தொடுத்தல், 3. வளைத்தல். (124)

### 1682. கட்டலின் பெயர்

விசித்தல், சிமிழ்த்தல், வீக்கல், சுருக்கல்,
அசைத்தல், ஆப்பே, யாப்பே, இமிழ்த்தல்,
யாத்தல், பிணித்தல், தொடுத்தல், தொடர்தல்,
ஆர்த்தல் **கட்டல்** ஆமென அறைவர்.

**கட்டலின் பெயர் :** (13)

1. விசித்தல், 2. சிமிழ்த்தல், 3. வீக்கல், 4. சுருக்கல், 5. அசைத்தல், 6. ஆப்பு, 7. யாப்பு, 8. இமிழ்த்தல்,

9. யாத்தல், 10. பிணித்தல், 11. தொடுத்தல் 12. தொடர்தல், 13. ஆர்த்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கட்டுதலின் பெயர்.

4 : 4 உரைப்பர்.

கட்டலின் பெயர் என்னும் தலைப்பில் 1681, 1682 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர்.

தொட்டல் பிடித்தல் வளைத்தல் பந்தித்தல்
விசித்தல் சிமிழ்த்தல் வீக்கல் சுருக்க
வசைத்த லிசைத்தல் யாப்பே யிமிழ்த்த
றொடுத்த லாத்தல் யாத்த றொடர்த
லார்த்தல் பிணித்தல் கட்ட லாகும்—அச்சுப்பிரதி.

3 : 1—2 அசைத்த லாப்பே

4 : 3 எரித்தல். (125)

## 1683. சுற்றுதலின் பெயர்

கலவல், **சுற்றுதல்.**

**சுற்றுதலின் பெயர் :** (1)

கலவல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. சுலாவல். (126)

## 1684. நிணத்தலின் பெயர்

வலத்தல், **நிணத்தல்.**

**நிணத்தலின் பெயர் :** (1)

வலத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

சுற்றுதலுக்கும் நிணத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1683, 1684 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (127)



## 1685. விடுதலின் பெயர்

தீர்தலும், தீர்த்தலும், **விடற்பொருட்டு ஆகும்.**

**விடுதலின் பெயர் :** (2)

1. தீர்தல், 2. தீர்த்தல். (128)

## 1686. பூசலின் பெயர்

உறழ்வு, வெஞ்சமம், மொய், செரு, ஞாட்பே,
இரணம், தாக்கே, இகல், ஆயோதனம்,
அமர், போர், உடன்றல், ஆர்ப்பு, நிகர்ப்பு,
மலைதல், நேர்தல், குறும்பே, உடலுதல்,
ஆகவம், மண்டல், தெவ்வு, வினை, ஆடல்,
திறல், மறல், மறம், முரண், சினம், சமர், சலிகம்,
ஆர்த்தல், சங்கிராமம், தும்பை, கூட்டம் என்று
ஈது எண்ணான்கோடு இரண்டும் **பூசல்.**

**பூசலின் பெயர் :** (34)

1. உறழ்வு, 2. வெஞ்சமம், 3. மொய், 4. செரு, 5. ஞாட்பு, 6. இரணம், 7. தாக்கு, 8. இகல், 9. ஆயோதனம், 10. அமர், 11. போர், 12. உடன்றல், 13. ஆர்ப்பு, 14. நிகர்ப்பு, 15. மலைதல், 16. நேர்தல், 17. குறும்பு, 18. உடலுதல், 19. ஆகவம், 20. மண்டல், 21. தெவ்வு, 22. வினை, 23. ஆடல், 24. திறல், 25. மறல், 26. மறம், 27. முரண், 28. சினம், 29. சமர், 30. சலிகம், 31. ஆர்த்தல், 32. சங்கிராமம், 33. தும்பை, 34. கூட்டம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பொருதலின் பெயர், போர் செய்தலின் பெயர்.

1 : 1 உழவு

5 : 2—3 மண்டலம் தெவ்வு வினை, மண்டிலந் தெவ்வு வினை.

6 : 1—2 திறல் முயல் முரணே, 4 சமீரம், கமரம்.

6 ஆம் அடியை முதலடியாகக் கொண்டும் சில பிரதிகள்.

திறல்முயல் முரணே சினவுதல் சமரம்
உறழ்வுபடை வெஞ்சமம் மொய்செரு ஞாட்பே
இரணந் தாக்கே யிகலா யோதனம்
அமர்போ ருடன்ற லார்ப்பு நிகர்ப்பு
மலைவு நேர்தல் மாறுகுறும்பே யுடலுதல்
ஆகவ மரண மண்டல் தெவ்வினை போராடல்
ஆர்த்தல் சங்கிராமந் தும்பை கட்டமென்
றீரெண் ணன்கோ டிரண்டும் பூசல்

என்றும் பிரதிபேதம் உண்டு. (129)

## 1687. தோற்றுதலின் பெயர்

பாரித்தல், **தோற்றுதல்.**

**தோற்றுதலின் பெயர் :** (1)

பாரித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

பாரித்த றோற்றரவு. (130)

## 1688. மிகுத்தலின் பெயர்

பூரித்தல், **மிகுத்தல்.**

**மிகுத்தலின் பெயர் :** (1)

பூரித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தோற்றுதலுக்கும் மிகுத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1687, 1688 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (131)

## 1689. தடுத்தலின் பெயர்

வாரித்தல், வாரணம், **தடுத்தல்** மாற்றம்.



**தடுத்தலின் பெயர் :** (2)

1. வாரித்தல், 2. வாரணம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா :

**மற்றுந் தடுத்தலின் பெயர்**

248. ★ ஆணை தட்ட றகைத்தலு மதுவே. (132)

## 1690. கொற்றவள்ளை என்னும் பெயர்

கூடலர் நாடுஅழிவு **கொற்றவள்ளை.**

**கொற்றவள்ளை என்னும் பெயர் :** (1)

கூடலர் நாடுஅழிவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கொற்றவள்ளை என்னும் சொற்பொருட் பெயர், கூடலர் நாடழிவின் பெயர். (133)

## 1691. தழிஞ்சி என்னும் பெயர்

சாய்ந்தார்மேல் படராமை **தழிஞ்சி** ஆகும்.

**தழிஞ்சி என்னும் பெயர் :** (1)

சாய்ந்தார்மேல் படராமை. (134)

## 1692. பாதீட்டின் பெயர்

அளித்தல், பெய்தல், **பாதீடு** ஆகும்.

**பாதீட்டின் பெயர் :** (2)

1. அளித்தல், 2. பெய்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நூற்பா ;

**மற்றும் பாதீட்டின் பெயர்**

*249.* ★ செறித்தலு மதுவெனச் செப்பற் பாற்றே. (*135*)

## 1693. கொட்டாவியின் பெயர்

ஆவித்தல், **கொட்டாவி.**

**கொட்டாவியின் பெயர் :** (*1*)

ஆவித்தல். (*136*)

## 1694. உயிர்ப்பின் பெயர்

**ஆவி, உயிர்ப்பே.**

**உயிர்ப்பின் பெயர் :** (*1*)

**ஆவி.**

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உயிரின் பெயர்

ஆவி யுயிரே.

கொட்டாவிக்கும் உயிர்ப்புக்கும் பெயர் என்னும் தலைப்பில் *1693, 1694* ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (*137*)

## 1695. வருத்தம் தீர்தலின் பெயர்

அயர்வுயிர்த்தல், **வருத்தம் தீர்தல்** ஆகும்.

**வருத்தம் தீர்தலின் பெயர் :** (*1*)

அயர்வுயிர்த்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

அயாவுயிர்த்தல்.

இந்நூற்பா *1693* ஆம் நூற்பாவாகிய கொட்டாவியின் பெயரை அடுத்து அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. (*138*)

## 1696. வியர்த்தலின் பெயர்

**வியர்த்தல்,** வேரரும்பல்.



**வியர்த்தலின் பெயர் :** (*1*)

**வேரரும்பல்.**

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : **வெயர்த்தலின் பெயர்.**

வெயிர்த்தல் வெயிர்வரும்பல். (*139*)

## 1697. போதரவிடுதலின் பெயர்

உயிர்த்தல், **போதரவிடல்.**

**போதரவிடுதலின் பெயர் :** (1)

உயிர்த்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : போகவிடுதலின் பெயர், வாய்விடலின் பெயர்.

உயிர்த்தல் வாய்விடல்—அச்சுப்பிரதி.

வெயர்த்தலுக்கும் போதரவிடலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1696, 1697 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (140)

## 1698. காய்தலின் பெயர்

முளிதல், வறத்தல், உலறுதல், **காய்தல்.**

**காய்தலின் பெயர் :** (*3*)

*1.* முளிதல், *2.* வறத்தல், *3.* உலறுதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. முனிதல், 2. முனித்தல், 3. உறுத்தல்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் தந்த புது நூற்பா :

**மற்றுங் காய்தலின் பெயர்**

**250.** ★ முதிர்ந்திட லென்பது மொழியுமற் றதற்கே. (*141*)

## 1699. தூவுதலின் பெயர்

பிலிற்றலும் பில்கலும் **தூவுதற் பொருள.**

**தூவுதலின் பெயர் : (2)**

1. பிலிற்றல், 2. பில்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உமிழ்தலின் பெயர்

1. பிலித்தலும் 3—4 உமிழ்தற் பொருள. 4. பொருளே பொழிதல் டனித்த விடுத லெக்கல். (142)

## 1700. சொரிதலின் பெயர்

பொழிதல், பனித்தல், இடுதல், எக்கல்,
சொரித லாகச் சொல்லுவர் புலவர்.

**சொரிதலின் பெயர் : (4)**

1. பொழிதல், 2. பனித்தல், 3. இடுதல், 4. எக்கல்.

**பாடவேறுபாடு – விளக்கம்**

1 : 4. எச்கர் – அச்சுப்பிரதி. (143)

## 1701. தெவிட்டலின் பெயர்

உமிழ்தலும், இமிழ்தலும், தெவிட்டலை இசைக்கும்.

**தெவிட்டலின் பெயர் : (2)**

1. உமிழ்தல், 2. இமிழ்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இமிழ்தலு முமிழ்தலும், இமிழ்த்தலு முமிழ்த்தலும்.
உமிழ்த்தலு மிமிழ்த்தலுந் தெவிட்டலை யுரைக்கும். (144)

## 1702. துவலைவிடுதலின் பெயர்

துவற்றல், துவலை விடுதல் ஆகும்.

**துவலைவிடுதலின் பெயர் : (1)**

துவற்றல்.



**பாடவேறுபாடு - விளக்கம்**

துவறல்

துவலை துவறல் விடுத லாகும். (145)

## 1703. உடன்படலின் பெயர்

ஒட்டலும், வலித்தலும், நேரலும் உடன்படல்.

**உடன்படலின் பெயர் : (3)**

1. ஒட்டல், 2. வலித்தல், 3. நேரல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3. நேர்தலும். (146)

## 1704. பொழுது நீட்டித்தலின் பெயர்

நெடித்தல், பாணித்தல், பொழுது நீட்டித்தல்.

**பொழுது நீட்டித்தலின் பெயர் : (2)**

1. நெடித்தல், 2. பாணித்தல். (147)

## 1705. ஒருங்கின் பெயர்

உடங்கு ஒருங்கு ஆகும்.

**ஒருங்கின் பெயர் : (1)**

உடங்கு. (148)

## 1706. உறுத்தலின் பெயர்

ஒற்றுதல், உறுத்தல்.

**உறுத்தலின் பெயர் : (1)**

ஒற்றுதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உறுதலின் பெயர்

ஒற்றுத லுறுதல்.

ஒருங்குக்கும் உறுத்தலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1705, 1706 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (149)

### 1707. எழுப்பலின் பெயர்

எற்றல், உணர்த்தல், எடுப்பல், எழுப்பல்.

**எழுப்பலின் பெயர் :** (3)

1. எற்றல், 2. உணர்த்தல், 3. எடுப்பல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : எழுப்புதலின் பெயர், ஏத்தலின் பெயர், ஏற்றலின் பெயர்.

1. எடுத்தல்

இதனை இருவேறு தலைப்பில் இரு நூற்பாக்களாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன.

**உணர்த்தலின் பெயர்**

எற்ற வுணர்த்தல்.

**எழுப்பலின் பெயர்**

எடுப்ப லெழுப்பல். (150)

### 1708. சோர்வின் பெயர்

கயக்கு, சோர்வு.

**சோர்வின் பெயர் :** (1)

கயக்கு. (151)

### 1709. வழுவின் பெயர்

பிறக்கு வழுவே.

**வழுவின் பெயர்** (1)

பிறக்கு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

வழுவின் பெயர் என்னும் தலைப்பில்,



கயக்கு சோர்வு பிறக்கு வழுவே

என்றும் சில பிரதிகளில் பாடம்.

சோர்வுக்கும் வழுவுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1708, 1709ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (152)

### 1710. இசைவின் பெயர்

இயைபே, புணர்ச்சி, இயைப்பு, இசைவு ஆகும்.

**இசைவின் பெயர் :** (3)

1. இயைபு, 2. புணர்ச்சி, 3. இயைப்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இசைத்தலின் பெயர்

1. இயைவே

இந்நூற்பாவை இருவேறு தலைப்பில் இருநூற்பாவாகவும் சில பிரதிகள் தந்துள்ளன.

**புணர்ச்சியின் பெயர்**

இயைபே புணர்ச்சி.

**இசைப்பின் பெயர்**

இசைப்பிசை யாகும். (153)

### 1711. மூடுதலின் பெயர்

மூய்தலும், கவித்தலும், மூடுதல் ஆகும்.

**மூடுதலின் பெயர் :** (2)

1. மூய்தல், 2. கவித்தல். (154)

### 1712. மொய்த்தலின் பெயர்

மூழ்தலும், மூசலும், மொஞ்சலும், மொய்த்தல்.

**மொய்த்தலின் பெயர் :** (3)

1. மூழ்தல், 2. மூசல், 3. மொஞ்சல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2—3 மூஞ்சலும் மொஞ்சலும்

3 முஞ்சலும், மூஞ்சலும் (155)

## 1713. அரசிறையின் பெயர்

**அரசிறை,** திறையே.

**அரசிறையின் பெயர் :** (1)

திறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 அரசிறை திறை.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்று மரசிறையின் பெயர்**

251.★ கட்பழ மிறையுங் காட்டு மதுவே. (156)

## 1714. சுங்கவிறையின் பெயர்

உல்கு, **சுங்கவிறை** ஆம்.

**சுங்கவிறையின் பெயர் :** (1)

உல்கு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. சுங்கவிறை யாகும்.

உல்கு சுங்கவிறை—அச்சுப்பிரதி.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

**மற்றுஞ் சுங்கவிறையின் பெயர்**

252.★ ஆயஞ் சாரிகை யஃதென மொழிப.

அரசிறைக்கும் சுங்கவிறைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1713, 1714 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (157)

## 1715. குடியிறையின் பெயர்

கரமும், கடனும், கறையும் **குடியிறை**யே.



**குடியிறையின் பெயர் :** (3)

1. கரம், 2. கடன், 3. கறை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

4. குடியிறை

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா:

**மற்றுங் குடியிறையின் பெயர்**

253.★ இறுப்பும் வரியு மேற்கு மதற்கே. (158)

## 1716. தேய்த்தலின் பெயர்

பாற்றல், **தேய்த்தல்.**

**தேய்த்தலின் பெயர் :** (1)

பாற்றல். (159)

## 1717. பிறக்கலின் பெயர்

போற்றல், **பிறக்கல்.**

**பிறக்கலின் பெயர் :** (1)

போற்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பெற்றலின் பெயர்

பெற்றல் பிறக்கம்.

தேய்த்தலுக்கும் பிறக்கலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1716, 1717 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (160)

## 1718. எழுச்சியின் மிகுதிப் பெயர்

கதித்தல், பம்பல், கஞறல், கன்றல்,

**எழுச்சியின் மிகுதிக்கு** எய்தும் பெயரே.

**எழுச்சியின் மிகுதிப் பெயர் :** *(4)*

1. கதித்தல், 2. பம்பல், 3. கருறல், 4. கன்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : எழுச்சியின் மிகுதிப் பெயர், எழுச்சி மிகுதிப் பெயர்.

1 : 2 பம்மல், 4. கஞன்றல். (161)

## 1719. எழுதலின் பெயர்

ஆக்கம், மலர்ச்சி, உறுமல், இவர்தல்,
ஒக்கம், உகைத்தல், **எழுதல்** ஆகும்.

**எழுதலின் பெயர் :** *(6)*

1. ஆக்கம், 2. மலர்ச்சி, 3. உறுமல், 4. இவர்தல், 5. ஒக்கம், 6. உகைத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 1 ஒழுக்கல் (162)

## 1720. தளிர்த்தலின் பெயர்

இலிர்த்தலும் சிலிர்த்தலும் **தளிர்த்தல்** ஆகும்.

**தளிர்த்தலின் பெயர் :** *(2)*

1. இலிர்த்தல், 2. சிலிர்த்தல்.

இந்நூற்பா அச்சுப்பிரதியில் இல்லை. (163)

## 1721. தழீஇக் கோடலின் பெயர்

விள்ளல், முயங்கல், **தழீஇக்கோடல்** ஆகும்.

**தழீஇக்கோடலின் பெயர் :** *(2)*

1. விள்ளல், 2. முயங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தழுவலின் பெயர்



விள்ளல் விளாவன் முயங்க றழீஇக்கோடல்—அச்சுப்பிரதி (164)

## 1722. சார்தலின் பெயர்

அண்ணுதல், தோய்வு, சார்ச்சி, அணவுதல்,
நண்ணுதல், தொடல், புல்லல், நணுகல், புணர்தல் என்று
எண்ணிய ஒன்பதும் படிதலும் **சார்தல்.**

**சார்தலின் பெயர் :** *(10)*

1. அண்ணுதல், 2. தோய்வு, 3. சார்ச்சி, 4. அணவுதல், 5. நண்ணுதல், 6. தொடல், 7. புல்லல், 8. நணுகல், 9. புணர்தல், 10. படிதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 3 நணுகுதல்

3 : 3—4 பிடித்தலுஞ் சார்வே.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்றுஞ்சார்தலின் பெயர்**

254. ★ மருவுத லணுக லகுகுறல் சிவ்ண
றுன்னலு மதுவெனச் சொல்லற் பால. (165)

## 1723. கலத்தலின் பெயர்

கலாவலும், துழாவலும், அளாவலும், **கலத்தல்.**

**கலத்தலின் பெயர் :** *(3)*

1. கலாவல், 2. துழாவல், 3. அளாவல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3. வளாவலும், விழாவலும், விளாவலும். (166)

## 1724. தடவலின் பெயர்

தைவரல், வருடல், நீவுதல், **தடவல்.**

**தடவுதலின் பெயர் :** (3)

1. தைவரல், 2. வருடல், 3. நீவுதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தடவுதலின் பெயர், வருடலின் பெயர்.

'தைவர னீவுத றடவல் வருடல்' என்றும் சில பிரதிகள். (167)

## 1725. திமிர்தலின் பெயர்

துவருதல், **திமிர்தல்**.

**திமிர்தலின் பெயர் :** (1)

துவருதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : திமிர்தற் பெயர்.

1. துவர்தல். (168)

## 1726. வளைதலின் பெயர்

வக்கிரம், **வளைதல்**.

**வளைதலின்பெயர் :** (1)

வக்கிரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

திமிர்தலுக்கும் வளைதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1745, 1746ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (169)

## 1727. வற்புறுத்தலின் பெயர்

வருட்டலும், தெருட்டலும் **வற்புறுத்தல்** ஆகும்.

**வற்புறுத்தலின் பெயர் :** (2)

1. வருட்டல், 2. தெருட்டல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 வருட்ட றெருட்டல்.

இதன் பின்னர் அச்சுப்பிரதியில் பின்வரும் நூற்பாக் காணப்படுகிறது.



**ஒழுக்கத்தின் பெயர்**

இயல்பு மாலையு நிழலு நடையுஞ்
செயலுஞ் சரிதையுங் கையாறு மொழுக்கம்.

இந்நூற்பா இங்குப் பிரதிகளில் தென்படவில்லை. 1743ஆம் நூற்பாவாக இஃது உள்ளது. (170)

## 1728. குற்றுதலின் பெயர்

அவைத்தல், **குற்றுதல்**.

**குற்றுதலின் பெயர் :** (1)

அவைத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. குத்துதல்.

குத்துதலின் பெயர் என்னும் தலைப்பில்,

அவைத்தல் குற்றுதல் கோறல் குத்துதல்

என்றும் சில பிரதிகளில் பாடம். இதனைக் குற்றுதலுக்கும் குத்துதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் அமைத்தாரும் உளர். இதனால் இந்நூற்பா, 'அவைத்தல் குற்றுதல்' என்றும் 'கோறல் குத்துதல்' என்றும் இரு நூற்பாவாகவும் சிலர் கொண்டமை பெறப்படும். (171)

## 1729. அடையின் பெயர்

ஆம்பல், **அடையே**.

**அடையின் பெயர் :** (1)

ஆம்பல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : படுதலின் பெயர்.

ஆம்பல் படுத லாகு மென்ப. (172)

## 1730. முளைத்தலின் பெயர்

உருத்தல், நாறுதல், பொடித்தல், தோற்றல் என

வடித்த நான்கும் **முளைத்தல்** ஆகும்.

**முளைத்தலின் பெயர் :** (4)

1. உருத்தல், 2. நாறுதல், 3. பொடித்தல், 4. தோற்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2—4 வுறுதல் பொடித்தல் பொடிதலென. (173)

## 1731. விரிதலின் பெயர்

எதிர்தல், மலர்தல், அலர்தல், விரிதல்.

**விரிதலின் பெயர் :** (3)

1. எதிர்தல், 2. மலர்தல், 3. அலர்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதனோடு,

அலர்த லலர்த்தல் விரித்த லாகும்

என்றும் ஓரடி சில பிரதிகளில் உள்ளது.

எதிர்தல் மலர்தல் பாவல் பரத்தல்
அலர்த லலர்த்தல் விரித லாகும்

என்றும்,

எதிர்தல் மலர்தல் பரத்த லலர்தல்
விரித லாகுமென்மன்னார் புலவர்

என்றும் பாடவேறுபாடுகள் உண்டு.

எதிர்தல் மலர்த லலர்தல் விரிதல்
விள்ளலு மவிழ்தலு விளம்பு மதற்கே—அச்சுப்பிரதி. (174)

## 1732. ஊழ்த்தல் என்னும் பெயர்

ஊழ்த்தல் செவ்வியும் பதனழிவும் ஆகும்.

**ஊழ்த்தல் என்னும் பெயர் :** (2)

1. செவ்வி, 2. பதனழிவு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஊழ்த்தல் என்னும் சொற்பொருட் பெயர்;



பதனழிவின் பெயர் என்னும் தலைப்பில்,

ஊழ்த்தல் செவ்வி யுறுபத னழிவே

என அச்சுப்பிரதி அமைந்துள்ளது.

'ஊழ்த்தலுஞ் செவ்வியும் பதனழிவாகும் என்ற பாடமும் உண்டு. இது தவறாகும். சூடாமணி 11 : 107 பார்க்க' என குறிப்புத் தந்துள்ளார் பேராசிரியர் மு. இராகவையங்கார்.

இதன்பின் அசைதலின் பெயர் (1736) ஒட்டுதலின் பெயர் (1737), பொருந்துதலின் பெயர் (1738) ஆகிய வற்றைச் சில பிரதிகள் அமைத்துள்ளன. (175)

## 1733. சமைத்தலின் பெயர்

சமைத்தல், சேர்த்தல், அமைத்தல் ஆகும்.

**சமைத்தலின் பெயர் :** (2)

1. சேர்த்தல், 2. அமைத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அமைத்தலின் பெயர். (176)

## 1734. மறிதலின் பெயர்

இகுதல், வீழ்தல், விளிதல், மறிதல்.

**மறிதலின் பெயர் :** (3)

1. இகுதல், 2. வீழ்தல், 3. விளிதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மறித்தலின் பெயர்

இகுத்தல் வீழ்த்தல் விளித்தல் மறித்தல்—அச்சுப்பிரதி. (177)

## 1735. மேவலின் பெயர்

வீழ்தலும், அமர்தலும், மேவல் ஆகும்.

**மேவலின் பெயர் :** (2)

*1. வீழ்தல், 2. அமர்தல்.*

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு :** விருப்பத்தின் பெயர்.

*1—2* வீழ்தலும் மாழ்தலும் மேவ லாகும்.

*3—4* மேவுத லாகும். (178)

## 1736. அசைதலின் பெயர்

**அசைதல்,** துயல்வரல்.

**அசைதலின் பெயர் :** (1)

துயல் வரல். (179)

## 1737. எட்டுதலின் பெயர்

அணவரல், **எட்டுதல்.**

**எட்டுதலின் பெயர் :** (1)

அணவரல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு :** ஒட்டுதலின் பெயர்

அணவ லெட்டுதல்

தணவுத லெட்டுதல். அச்சுப்பிரதி.

அணவ லொட்டுதல்.

அசைதலுக்கும் எட்டுதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1736, 1737ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (180)

## 1738. கூடலின் பெயர்

ஒல்லல், சிவணல், பொருந்தல், **கூடல்.**

**கூடலின் பெயர் :** (3)

1. ஒல்லல், 2. சிவணல், 3. பொருந்தல்,



**பாடவேறுபாடு— விளக்கம்**

**தலைப்பு :** கூடுதலின் பெயர், பொருந்துதலின் பெயர்.

4. கூடுதல் (181)

## 1739. சரண்புகலின் பெயர்

மறைபுகல் (கிளவி), **சரண்புகல்** ஆகும்.

**சரண்புகலின் பெயர் :** (1)

மறைபுகல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

**தலைப்பு :** சரண்புகுதலின் பெயர்

*3—4* சரண்புகுத லாகும். (182)

## 1740. காவலின் பெயர்

சிறையும், அரணமும், சேமமும், ஏமமும், கடியும், கதவும், கட்டும், **காவல்.**

**காவலின் பெயர் :** (7)

1. சிறை, 2. அரணம், 3. சேமம், 4. ஏமம், 5. கடி, 6. கதவு, 7. கட்டு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*1 : 3—4* ஏமமும் சேமமும். (183)

## 1741. ஏவலின் பெயர்

வியங்கோள், **ஏவல்.**

**ஏவலின் பெயர் :** (1)

வியங்கோள். (184)

## 1742. வறுமையின் பெயர்

வீதல், **வறுமை.**

**வறுமையின் பெயர் :** (1)

வீதல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

வீதல் வெறுமை என்றும் பாடம்.

ஏவலுக்கும் வறுமைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1741, 1742ஆம் நூற்பாக்களை ஒன்றாகவும் சிலர் கொள்வர். (185)

## 1743. ஒழுக்கத்தின் பெயர்

இயல்பும், மாலையும், நடையும், நிழலும்,
செயலும், சரிதையும், கையாறும், **ஒழுக்கம்.**

**ஒழுக்கத்தின் பெயர் :** (7)

1. இயல்பு 2. மாலை, 3. நடை, 4. நிழல், 5. செயல், 6. சரிதை, 7. கையாறு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3—4 நிழலு நடையும்

இந்நூற்பா அச்சுப்பிரதியில் இங்குத் தரப்படவில்லை. வற்புறுத்தலின் பெயரை (1727) அடுத்துக் காணப்படுகிறது. (186)

## 1744. அவித்தலின் பெயர்

நவித்தலும், நுதுத்தலும், நொகுத்தலும் **அவித்தல்.**

**அவித்தலின் பெயர் :** (3)

1. நவித்தல், 2. நுதுத்தல், 3. நொகுத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. நுகுக்கலும், நொகுத்தலும், 3. நுதுத்தலும், துய்த்தலும்.

நதுத்தலு நொகுத்தலு நுதுத்தலு மவித்தல்
—அச்சுப்பிரதி. (187)



## 1745. மூட்டலின் பெயர்

மாட்டலும், பொருத்தலும், **மூட்டல்** ஆகும்.

**மூட்டலின் பெயர் :** (2)

1. மாட்டல், 2. பொருத்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மூட்டுதலின் பெயர்.

3—4 மூட்டுத லாகும். (188)

## 1746. குளித்தலின் பெயர்

**குளித்தலும்** மூழ்கலும் செறித்தலைக் கூறும்.

**குளித்தலின் பெயர் :** (2)

1. மூழ்கல், 2. செறித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : செறித்தலின் பெயர். (189)

## 1747. கூட்டத்தின் பெயர்

யோகம், **கூட்டம்.**

**கூட்டத்தின் பெயர்** (1)

யோகம். (190)

## 1748. விடுதலின் பெயர்

வியோகம், **விடுதல்.**

**விடுதலின் பெயர் :** (1)

வியோகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

கூட்டத்துக்கும் விடுதலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 1747, 1748 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்றும் விடுதலின் பெயர்**

255. ★ மோசன மோக்கம் வீதலு மதுவே. (191)

## 1749. கடுமையின் பெயர்

வேகம், கடுமை எனவிளம் பினரே.

**கடுமையின் பெயர் : (1)**

வேகம். (192)

## 1750. செய்கடனின் பெயர்

நியமமும், நியதியும், நிகழ்வும், செய்கடன்.

**செய்கடனின் பெயர் : (3)**

1 நியமம், 2. நியதி, 3. நிகழ்வு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3. நிசமும். (193)

## 1751. குயிலுவம் என்னும் பெயர்

குயிலுவத் தொழிலே நரப்புக் கருவி
பயிலும் பாடற் பண்பிற்று ஆகும்.

**குயிலுவம் என்னும் பெயர் :** நரம்புக் கருவி பயிலும் பாடற் பண்பு. (நரம்புக் கருவியால் பாடுவது).

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குயிலுவத் தொழில் என்பது.

3—4 நரப்பு முன் கருவி—பிற்பதிப்புக்கள். (194)

## 1752. கூத்தின் பெயர்

நடமே, நாடகம், கண்ணுள், நட்டம்,
படிதம், ஆடல், தாண்டவம், பரதம்,



ஆலுதல், துணங்கை, தூங்கல், பாணி,
குரவை, நிருத்தம், கூத்துஎனப் படுமே.

**கூத்தின் பெயர் : (14)**

1. நடம், 2. நாடகம், 3. கண்ணுள், 4. நட்டம், 5. படிதம், 6. ஆடல், 7. தாண்டவம், 8. பரதம், 9. ஆலுதல், 10. துணங்கை, 11 தூங்கல், 12. பாணி, 13. குரவை, 14. நிருத்தம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3. ஆலுத றூங்கல் பாணி குரவை ; 3 : 4 வாணி

4. நிலய நிருத்தங் கூத்தெனப் படுமே
இலய நிலய நிருத்தங் கூத்தே

4 : 1 நிலையம்

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்றுங் கூத்தின் பெயர்**

256. ★ நடனந் தூக்கு நாட்டிய நட்டண
நடையு மதற்கே நவிலப் படுமே. (195)

## 1753. சிவனாடலின் பெயர்

பாண்டரங்கம், காபாலம், கொடுகொட்டி என்று இவை மூன்றும் முக்கணன் ஆடலைக் கூறும்.

**சிவனாடலின் பெயர் : (3)**

1. பாண்டரங்கம், 2. காபாலம், 3. கொடுகொட்டி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பரமனாடலின் பெயர்.

பாண்டரங்கங் காபாலங் கொடுகொட்டி பரமனாடல்.

1 : 2 கபாலம்

2 : 3—4 ஆடலை மொழிப

பாண்டரங் கங்கபா லங்கொடு கொட்டி
யென்றிவை மூன்று முக்கண னாடல்
—அச்சுப்பிரதி. (196)

## 1754. குமரனாடலின் பெயர்

கொட்டியும், குடையும், **குமரன் ஆடற்கு**
ஒட்டிய பேரிற்கு உரித்தா கும்மே.

**குமரனாடலின் பெயர் :** (2)

1. கொட்டி, 2. குடை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முருகனாடலின் பெயர்.

கொட்டியுங் குடையுங் குமரனா டற்பெயர்.

கொட்டியுங் குடையுங் குமரனாடல்—அச்சுப்பிரதி. (197)

## 1755. மாயோனாடலின் பெயர்

அல்லியம், குடமாடல், மல்லே, மரக்கால்,
எல்ஒளி **மாயோன் ஆடல்** ஆகும்.

**மாயோனாடலின் பெயர் :** (4)

1. அல்லியம், 2. குடமாடல், 3. மல், 4. மரக்கால்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

முருகனாடல், மாயோனாடல், சிவனாடல் (1754, 1755, 1753) என்னும் வரிசை முறை பேராசிரியர் மு. இராகவையங்கார் பிரதியில் காணப்படுகிறது.

அச்சுப்பிரதியில் மாயோனாடல், சிவனாடல், முருகனாடல் (1755, 1753, 1754) என்னும் அடைவு முறை காணப்படுகிறது. (198)

## 1756. திருமகளாடலின் பெயர்

பாவை என்பது **திருமகள் ஆடல்.**

**திருமகளாடலின் பெயர் :** (1)

பாவை. (199)

## 1757. அயிராணியாடலின் பெயர்

**அயிராணி ஆடற்பெயர்** கடையம் ஆகும்.



**அயிராணியாடலின் பெயர் :** (1)

கடையம்.

**பாடவேறுபாடு - விளக்கம்**

தலைப்பு : இந்திராணியாடலின் பெயர்

2 : 3 ஆடல் கடையம்

இதன்பின் **துர்க்கையாடலின் பெயர்** என்னும் தலைப்பில் அச்சுப்பிரதியில் பின்வரும் நூற்பா காணப்படுகிறது:

மரக்காற் கூத்தே துர்க்கை யாடல்.

இந்நூற்பா பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. (200)

## 1758. சத்தமாதாக்களாடலின் பெயர்

**எழுவர் மங்கையர் ஆடலும்** துடியே.

**சத்தமாதாக்களாடலின் பெயர் :** (1)

துடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சத்தமாதராடலின் பெயர். (201)

## 1759. காமனாடலின் பெயர்

பேடு ஆடல் **காமன் ஆடல்** ஆகும்.

**காமனாடலின் பெயர் :** (1)

பேடு. (202)

## 1760. கூத்துவிகற்பத்தின் பெயர்

கரணம், வித்தம், மலைப்புட், பவுரி,
பிரமரி, வீரட் டானம், குனிப்பே,
உள்ளாளம், கடகம் என்ன ஒன்பதும்
ஒள்ளிய **கூத்தின் விகற்பம்** ஆகும்.

**கூத்து விகற்பத்தின் பெயர் :** (9)

1. கரணம், 2. வித்தம், 3. மலைப்பு, 4. பவுரி,

5. பிரமரி, 6. வீரட்டானம், 7. குனிப்பு, 8. உள்ளாளம், 9. கடகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* கூத்தின் விகற் த்தின் பெயர்.

1 : 4 பவரி

2 : 4 குனிப்டம்

3. உள்ளாளனங் கடக மெனவே யொன்பதும்.

இதனோடு முதற்பதிப்பாசிரியர் இணைத்த புது நூற்பா :

**மற்றுங்கூத்தின் விகற்பத்தின் பெயர்**

257. ★ உம்பிதம் புரிய மிலயம் பரதமு
மப்பெயர்க் காமென் றறைந்தனர் புலவர். (203)

## 1761. கைகோத்தாடலின் பெயர்

குரவைக் கூத்தே **கைகோத்து ஆடல்.**

**கைகோத்தாடலின் பெயர் :** (1)

குரவைக்கூத்து.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* குரவைக் கூத்தென்னும் பெயர் (204)

## 1762. துணங்கை என்னும் பெயர்

முடக்கை இருகை பழுப்புடை ஒற்றித்
துடக்கிய நடையது **துணங்கை** ஆகும்.

**துணங்கை என்னும் பெயர் :** முடக்கிய இருகைப் பழுப்புடை ஒற்றி ஆடல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* துணங்கை என்னும் சொற்பொருட் பெயர். (205)



## 1763. வேலனாடலின் பெயர்

வெறியும், அணங்கும், கழங்கும் **வேலன் ஆடல்**

**வேலனாடலின் பெயர் :** (3)

1. வெறி, 2. அணங்கு, 3. கழங்கு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—2 அணங்கும் வெறியுங் (206)

## 1764. வட்டணை பொறுத்தலின் பெயர்

வட்டித்தல், தட்டல், **வட்டணை பொறுத்தல்.**

**வட்டணை பொறுத்தலின் பெயர் :** (2)

1. வட்டித்தல். 2. தட்டல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* ஒற்றறுத்தலின் பெயர், ஒத்தறுத்தலின் பெயர்.

3—4 வட்டணையொற் றறுத்தல் (207)

## 1765. அங்கை குவித்துக் கொட்டலின் பெயர்

கொம்மை, **அங்கை குவித்துக் கொட்டல்.**

**அங்கை குவித்துக் கொட்டலின் பெயர் :** (1)

கொம்மை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

*தலைப்பு :* கொம்மை கொட்டலின் பெயர், கைகுவித்துக் கொட்டலின் பெயர்

கொம்மை கொட்டல் கைகுவித்துக் கொட்டல்
—அச்சுப்பிரதி. (208)

## 1766. ஆர்த்துவாய்புடைத்தலின் பெயர்

ஆவலங் கொட்டல், **ஆர்த்துவாய் புடைத்தல்.**

**ஆர்த்துவாய் புடைத்தலின் பெயர் : (1)**

ஆவலங்கொட்டல். (209)

## 1767. குந்தி நிற்றலின் பெயர்

**குந்திய கால்நிலை,** குஞ்சித்தல் ஆகும்.

**குந்தி நிற்றலின் பெயர் : (1)**

குஞ்சித்தல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குஞ்சித்தலின் பெயர், குந்திய நிலையின் பெயர். (210)

## 1768. குடந்தம் என்னும் பெயர்

**குடந்தம்,** கைகூப்பி மெய்கோட்டி நிற்றல்.

**குடந்தம் என்னும் பெயர் : (1)**

கைகூப்பி மெய்கோட்டி நிற்றல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கைகூப்பி மெய்கோட்டி நிற்றலின் பெயர்.

3—4 மெய்கோட்டி நிற்றல். (211)

## 1769. தாளவொற்றின் பெயர்

சதியும், சீரும் **தாளவொற்றின் பெயரே.**

**தாளவொற்றின் பெயர் : (2)**

1. சதி, 2. சீர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தாள வொத்தின் பெயர்.

3—4 தாள வொற்றே (212)

## 1770. நடம் என்னும் பெயர்

அதனின் நடிப்பது நடம் ஆகும்மே.

**நடம் என்னும் பெயர் : (1)**

தாள வொற்றிற்கு ஏற்ப நடிப்பது.



**பாடவேறுபாடு - விளக்கம்**

தலைப்பு : அதனின டித்தலின் பெயர்.

1—2 அதனின டப்பது.

இதன் பின்னர் இத்தொகுதி முடிவு வரையில் அச்சுப் பிரதியில் காணப்படும் நூற்பாக்கள் ஏடுகளில் காணப்பட வில்லை. இவற்றைத் தாம் புதுவதாக ஆக்கிய நூற்பா என முதற் பதிப்பாசிரியர் உடுக்குறியிட்டுச் சுட்டவும் இல்லை. பேராசிரியர் மு இராகவையங்கார் அவர்களும் இவை ஏட்டுப் பிரதியில் இல்லை என்பதைத் தம் கையெழுத்துப் பிரதியில் இருதலைப் பகர வளைவுக் குறியிட்டுத் [ ] தெளிவுபடுத்தியுள்ளார். ஐயத்திற்கிடமாயுள்ள இந்நூற் பாக்கள் முதற்பதிப்பில் கண்டவாறே இங்கும் தரப்படு கின்றன. முதற்பதிப்பாசிரியர் இடையிடையே சேர்த் துள்ள புது நூற்பாக்களைப் போலப் பிற்காலத்து வந்த ஒருவர் இவற்றை எழுதிச் சேர்த்து விட்டனராதல் வேண்டும்.

**கீறலின் பெயர்**

கீளல் கீண்டல் கிழித்திடல் கீன்றல்

கீழ்தல் பீறல் கீறலின் பெயரே.

**கிளைத்தலின் பெயர்**

பிளிறன் ஞெண்டல் கிண்டல் கிளைத்தல்.

**கத்தரித்தலின் பெயர்**

கொய்தல் கத்தரித்தல்.

**குட்டுதலின் பெயர்**

தகர்த்தல் குட்டுத லுடைத்தலு மாகும்.

**அடுக்குதலின் பெயர்**

ஏற்ற லடுக்குதல்.

**ஒழிதலின் பெயர்**

ஒவ லொழிதல்.

**மாற்றலின் பெயர்**

விலக்கன் மாற்றல்.

**மிசையின் பெயர்**

மீமிசை மிசையே.

**தாபித்தலின் பெயர்**

நிலைபடச் செய்த றாபித்த லாகும்.

**நிறுத்தலின் பெயர்**

நோன்ற றானே நிறுத்த லென்ப.

**சொலித்திடலின் பெயர்**

இடத்தல் சொலித்திட லென்னற் பாற்றே.

**வகிர்தலின் பெயர்**

துவர்தல் வகிர்த லாகச் சொல்லுவர்.

**குத்தலின் பெயர்**

புடைத்த லெறித்த லெற்றலிம் மூன்றுங்
குத்த லென்னக் கூறப் படுமே.

**அடித்தலின் பெயர்**

கொட்டன் மொத்த லறைத லகைத்த
லெற்ற லதுக்கன் மோதல் வழுக்க
லென்றிவை யெட்டு மடித்த லென்ப.

**வசமாக்குதலின் பெயர்**

வடித்தல் வசமாக் குதலின் மாற்றே.

**முண்டித மாக்கலின் பெயர்**

மழித்தல் முண்டித மாக்க லென்ப.

**வாருதலின் பெயர்**

வளைத்தல் கவர்தல் வௌவல் கொளலிவை
வாருத லென்ன வகுக்கற் பால.

**கொள்ளையின் பெயர்**

நொண்டி சூறை கொள்ளை யாகும்.

**பரத்தலின் பெயர்**

டாரித்தல் விரியல் பரத்த லென்ப.

**முகத்தலின் பெயர்**

தோண்ட னோண்டன் முகத்த லென்ப.

**காத்தலின் பெயர்**

திதிநிலை பெறுத்த னோக்கல் புரத்தல்
காத்த லென்னக் கழறப் படுமே.



**பங்கீட்டின் பெயர்**

பகுத்தல் பாத்தல் பாகம் பாதி
பங்கீ டென்னப் பகரற் பால.

**விரித்தலின் பெயர்**

இகுத்தல் விரித்தல்.

**பொதிதலின் பெயர்**

வீக்கம் பொதிதல்.

**சித்தின் பெயர்**

சம்பிரதஞ் சித்தின் மேற்றே.

**அருவலின் பெயர்**

பருவர லருவல்.

**நீக்கலின் பெயர்**

வரைவு நீக்கல்.

**மாறுபாட்டின் பெயர்**

செற்ற லென்பது மாறுபா டென்ப.

**சுடலின் பெயர்**

தாபிதஞ் சந்தாபஞ் சுடலெனப் படுமே.

**மறைப்பின் பெயர்**

மாய்த லாவரண மறைப்பின் பெயரே.

**தள்ளலின் பெயர்**

நூக்க லூன்ற னோன்ற றள்ளல்.

**அவமதிச் சிரிப்பின் பெயர்**

அசிய மவமதிச்சிரிப் பாமென வறைவர்.
ஆசியம்—மு. ரா.

**பிணக்கின் பெயர்**

மறலரி லபரந் துவக்குப் பிணக்கே.

**கொப்பளித்தலின் பெயர்**

பிளிற்றல் பில்கல் காலல் கொப்பளித்த
லுமிழ்தலு மாமென வுரைக்கற் பாற்றே

**அலையலின் பெயர்**

அலைசல் ஞெகிழ்தல் ஞொள்க லாஞ்சி

அலையலின் பெயரென வறைதற் குரிய.

**சத்தி செயலின் பெயர்**

உமிழ்தல் கான்ற லுற்காரஞ் சத்தி.

உமிழ்தல் கான்ற லுற்காரஞ் சத்தி
செயலின் பெயரெனச் செப்பினர் புலவர்—பிற்பதிப்புக்கள்.

**மூச்சின் பெயர்**

தும்மல் சுவாச மூச்செனச் சொல்லும்.

**தாழ்தலின் பெயர்**

குரங்க லிறைஞ்சல் கூறுப தாழ்தல்.

**இறக்குதலின் பெயர்**

இறக்குத லிறங்குதல் குனிவு மாகும்

இதன் பின்னர் 1770 ஆம் நூற்பாவை முதற்பதிப்பும் அதன் வழிவந்த பிற்பதிப்புக்களும் அமைத்துள்ளன.

## 1771. சேந்தன் பெரும்புகழ்

அண்ணல் சம்புஆதிக் காணி யாட்டியை,
பெண்ணணங்கை, மூவுலகும் பெற்ற அம்மையை,
செந்தமிழ் மாலை அந்தாதி புனைந்த
நாவலன், அம்பர்க் காவலன், சேந்தன்
உயர்வுற்ற திவாகரத்து ஒன்பதாவது
**செயல்பற்றிய பெயர்த்தொகுதி** முற்றும்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 1—2 அண்ணல் செம்பாதிக்
4 : 2—3 அம்பற் காவலன்
5 : 1—2 செய்கையுற்ற, இயல்வுற்ற (214)

பத்தாவது

# ஒலி பற்றிய பெயர்த்தொகுதி